வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu




Email : news@eelanadu.lk மலர் : 03 27.01.2022 வியாழக்கிழமை இதழ் : 53 பக்கங்கள் : 16

## மின்சார சபை தலைவர் நேற்று பதவி விலகினார்!

கொழும்பு, ஜன. 27

இலங்கை மின்சார சபையின் தலைவர் எம்.எம்.சி. பேர்டினண்டோ பதவி விலகுவதாக ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்பியுள்ளார்.

எதிர்வரும் முதலாம் திகதி முதல் தான் பதவி விலகவுள்ளார் என,



15

## தமிழரின் ஒருமித்த கோரிக்கையை எதிர்க்கும் அரச கைக்கூலிகளுக்கு இடம் அளிக்காதீர்கள்!

### தமிழ் மக்களிடம் ரெலோ கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஜன. 27

“இந்தியாவை நோக்கிய கோரிக்கையின் வழியாக இலங்கை அரசின் இனவழிப்புக்கு எதிராக தந்திரோபாய நகர்வை தமிழர் தரப்பு ஒருமித்த பலத்துடன் மேற்கொண்டுள்ளது. இதற்கு எதிராக போராட்டத்தை நடத்தி தமிழர் தரப்பை காட்டிக் கொடுக்கும் நடவடிக்கையில் ஈடுபடும் அரசின் கைக்கூலிகளின் நடவடிக்கைகளுக்கு இடம் அளிக்காதீர்கள்.”

- இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான ரெலோ.

இது குறித்து அது வெளியிட்

15

## வடக்கில் நேற்று 9 தொற்றாளர்!

யாழ்ப்பாணம், ஜன. 27

யாழ்ப்பாணத்தில் 5 பேர் உட்பட வடக்கு மாகாணத்தில் நேற்று 9 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டனர்.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் நேற்று நடத்தப்பட்ட பி. சி. ஆர். பரிசோதனையிலேயே இந்த விடயம் வெளியானது.

அந்த சோதனை அறிக்கையின் பிரகாரம்,

யாழ். போதனா மருத்துவமனையில் மூவரும், பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் ஒருவரும், சாவகச்சேரி ஆதார

15

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள்

# வவுனியா மாவட்ட செயலகத்தை முற்றுகையிட்டு நேற்று போராட்டம்

## பொலிஸ் - போராட்ட தரப்பு முறுகலால் பதற்றநிலை



வவுனியா, ஜனவரி 27

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் நேற்று வவுனியா மாவட்ட செயலகத்தை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தினர். நீதி அமைச்சின் நடமாடும் சேவை நேற்று ஆரம்பமான போதே இந்த முற்றுகைப் போராட்டம் இடம்பெற்றது.

15

## கொரோனாவுக்கு 16 பேர் மரணம்!

கொழும்பு, ஜன. 27

நாட்டில் கொரோனா தொற்றால் பெண்கள் 8 பேர் உட்பட 16 பேர் நேற்று முன்தினம் உயிரிழந்தனர் என்று அரசாங்க தகவல் திணைக்களம் நேற்று உறுதிப்படுத்தியது.

இந்த மரணங்களின் எண்ணிக்கையுடன் தொற்றால் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 15 ஆயிரத்து 346ஆக உயர்ந்துள்ளது. (ஐ)

## கிளிநொச்சியில் தொற்று உச்சம்; 2 நாட்களில் 106 பேர் அடையாளம்

கிளிநொச்சி, ஜன. 27

கிளிநொச்சியில் கடந்த இரு நாட்களில் - திங்கள், செவ்வாய்கிழமைகளில் மட்டும் 106 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டதாக மாவட்ட சுகாதார தரப்பு தெரிவித்துள்ளது.

எனவே, கிளிநொச்சி மாவட்ட மக்கள் அவதானத்துடனும் சுகாதார விதி களை பின்பற்றியும் செயல்படுமாறும் மாவட்ட சுகாதாரப் பிரிவு கேட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த நேற்று செவ்வாய்க்கிழமை 40 தொற்றாளர்களும், அதற்கு முதல் நாளான திங்கட்கிழமை 66 தொற்

15

## இலங்கை செல்வோருக்கு கனடா பயண எச்சரிக்கை

ஒன்ராறியோ, ஜன. 27

இலங்கைக்கு செல்லும் கனேடியர்களுக்கு அந்த நாட்டு அரசாங்கம் மீண்டும் பயண எச்சரிக்கை விடுத்துள்ளது.

அந்த நாட்டின் சுற்றுலா துறை தொடர்பான அமைச்சு நேற்று வெளியிட்ட உத்தியோக பூர்வ அறிவிப்பின் படி,

15

## தமிழக மீனவர்களின் படகுகளை ஏலம் விடுவதை தடுக்கவேண்டும்

### நரேந்திர மோடிக்கு ஸ்ராலின் கடிதம்

சென்னை, ஜன. 27

இலங்கை அரசாங்கம் கைப்பற்றிய படகுகளை ஏலம் விடுவதைத் தடுத்து நிறுத்தவும் தமிழக மீனவர்கள் மீதான தாக்குதலை நிறுத்தவும் மத்திய அரசு வலியுறுத்த வேண்டும் என்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று செவ்வாய்க்கிழமை வலியுறுத்தியுள்ளார்.

இந்த விடயம் குறித்து பிரதமர் நரேந்திர மோடி மற்றும் வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கருக்கு தனித்தனியாக கடிதம் எழுதியுள்ள ஸ்டாலின், தமிழக மீனவர்களிடம் இருந்து இலங்கை அரசால் பறிமுதல் செய்யப்பட்ட 105

15

## சைக்கிளில் அலுவலகம் செல்வோருக்கு சலுகை!

### சுற்றாடல் அமைச்சு பரிசீலனை

கொழும்பு, ஜன. 27

அனைத்து வீதிகளிலும் சைக்கிள் ஓட்டுபவர்களுக்கு ஒரு பாதையை ஒதுக்குவதுடன், சுற்றாடல் அமைச்சுடன் இணைந்த நிறுவனங்களில் சைக்கிள் ஓட்டுபவர்களுக்கு சலுகைகளை வழங்குவதற்கான ஒழுங்குமுறை வேலைத்திட்டத்தை அறிமுகப்படுத்த வுள்ளதாக சுற்றாடல் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

காற்று மாசுபாட்டை குறைக்கும் நடவடிக்கையாக சைக்கிள் பாவனையை ஊக்குவிக்க

15



## பிளாஸ்ரிக் கழிவுகளை உண்ட மேலும் இரு யானைகள் மரணம்!

அம்பாறை, ஜன. 26

அம்பாறை - தீகவாவி - பள்ளக்காடு கிராமத்தின் குப்பை மேட்டில் பிளாஸ்ரிக், பொலித்தீன் கழிவுகளை உட்கொண்ட மேலும் இரு யானை

15

# இப்படியும் நடக்கிறது...!

விடுதலைப் புலிகள் இயக்கத்திலிருந்தபோது, ஆயுதம் தூக்கிப் போராடிய பலர் இன்றும் இலங்கையில் தாமுண்டு தம் வேலையுண்டு என்று வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

அதிகம் ஏன், ஆயுதப் போராட்டகாலத்தில் புலிகள் மீதான பாரிய குற்றச்சாட்டுக்களைச் சுமத்தக்கூடிய தாக்குதல்கள் பலவற்றுக்கு காரணமானவர்களில் ஒருவர் புலிகளின் கருணா அம்மான் என்று அறியப்பட்ட விநாயகமூர்த்தி முரளிதரன். இவர், அரசாங்கத்தின் ஆதரவு அரசியல்வாதியாக வலம்வந்துகொண்டிருக்கின்றார்.

இப்படி பலரைப் பட்டியலிடலாம்.

அரசாங்கத்தால் வழங்கப்பட்ட புனர்வாழ்வின் பின்னர் சமூகத்துடன் இணைக்கப்பட்டவர்கள் ஏராளமானவர்கள்.

இப்படியிருக்கையில், இறுதிக்கட்ட யுத்தம் நடந்துகொண்டிருந்தபோது படையினரிடம் சரணடைந்த, புலிகளின் ஊடக இணைப்பாளராக இருந்த தயா மாஸ்ரர் என்ற வேலாயுதம் தயாநிதிமீது மட்டும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

நல்லாட்சிக் காலத்தில் கடந்த இரண்டாயிரத்து பதினெட்டாம் ஆண்டு, வவுனியா மேல்நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் அவர்மீது பல்வேறு கடுமையான குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டன.

கட்டாய ஆட்சேர்ப்பு செய்தமையும் அந்த குற்றச்சாட்டுக்களில் ஒன்று.

வழக்கு தாக்கல் செய்யப்பட்டபோது தயா மாஸ்ரர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி சுமந்திரன், பலத்த முயற்சி செய்தும் அவர் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு முதல்நாள் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டதையடுத்து அவர் சிறையில் அடைக்கப்பட்டார்.

சில நாட்கள் சிறைவாசத்திற்கு பின்னரே அவருக்கு பிணை வழங்கப்பட்டது.

கடந்த நான்கு ஆண்டுகால சட்டப் போராட்டத்தின் பின்னர், அவர்மீதான பாரிய தண்டனைக்குரிய குற்றச்சாட்டுக்கள் நீக்கப்பட்டு, புலிகளின் தலைவர்களுடன் சேர்ந்து பணியாற்றியதான சிறிய குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு புதிய வழக்கு தாக்கல் செய்யப்பட்டபோதே, தயா மாஸ்ரர் குற்றத்தை ஒப்புக்கொண்டதால் குற்றவாளியாக காணப்பட்டு தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

ஆக, இந்த வழக்கில் தயா மாஸ்ரர் இப்போது தண்டனை விதிக்கப்பட்ட குற்றவாளி. தண்டனை மட்டுமே ஐந்து ஆண்டுகளுக்கு ஒத்திவைக்கப்பட்டிருக்கின்றது.

தயா மாஸ்ரர் இந்த ஐந்து ஆண்டுகளில் ஏதேனும் மற்றொரு வழக்கில் குற்றவாளியாக காணப்பட்டால் அந்த புதிய வழக்கில் கிடைக்கும் தண்டனையுடன் இந்த வழக்கில் விதிக்கப்பட்ட தண்டனையையும் சேர்த்து அனுபவிக்கவேண்டும்.

தயா மாஸ்ரர் சரணடைந்ததும் அவரை அரச ஆதரவாளராக காட்ட சில புலம்பெயர்ந்தவர்கள் முண்டியடித்தனர்.

அவர் ‘சூழ்நிலைக் கைதியாகவே’ இருந்தார் என்பதை அவருடன் நெருங்கியவர்கள் அறிவார்கள்.

தற்போதைய பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக இருக்கும் கமல் குணரத்ன எழுதிய நூல் ஒன்றில் அவர் தெரிவித்திருக்கும் ஒரு செய்தி இங்கே ஞாபகப்படுத்தப்பட வேண்டியது.

புலிகளின் தலைவரின் சடலத்தை அடையாளம் காட்டுவதற்காக தயா மாஸ்ரரும் கருணாவும் முள்ளிவாய்க்கால் அழைத்துச் செல்லப்பட்ட காட்சி இன்றும் உங்களில் பலருக்கு ஞாபகம் இருக்கலாம்.

அந்தச் சம்பவத்தை தனது நூலில் விபரித்த கமல் குணரத்ன, சடலத்தை பார்த்ததும், கருணா மகிழ்ச்சியுடன் காணப்பட்டபோதிலும், தயா மாஸ்ரர் மிகவும் உணர்ச்சிவசப்பட்டவராக காணப்பட்டதுடன், அவரது கண்கள் கலங்கியதை தன்னால் அவதானிக்க முடிந்ததாகவும் தெரிவித்திருக்கிறார்.

இவையல்ல இன்று நமது கவனத்திற்குரியவை. இந்த வழக்கும் தீர்ப்பும் சொல்லும் செய்தி என்ன என்பதுதான் நமக்கு கவனத்திற்குரியது.

புலிகள் இயக்கத்தில் இருந்தபோது ஆயுதத்தை தொட்டும் பார்த்திருக்காத தயா மாஸ்ரரையே இவ்வாறு வழக்கு ஒன்றின் மூலம் தண்டிக்க முடியும் என்றால், மற்றவர்கள் குறிப்பாக ஆயுதம் தூக்கியவர்களின் நிலை என்ன என்பதை நினைத்துப் பார்க்காமல் இருக்கவும் முடியவில்லை.

இதுவும் நமது நல்லாட்சி காலத்தில் செய்யப்பட்டு, இன்றைய ஆட்சியாளர்களுக்கும் ஒரு முன்னுதாரணமான வழக்காக ஆகியிருப்பதும் நமது கவனத்திற்குரியது.

**- ஊர்க்குருவி**

# கம்பஹா, கொழும்பில் கோவிட் பரவல் உச்சம்!

## சுதர்ஷனி பெர்னாண்டோபுள்ளே கூறுகிறார்

கொழும்பு, ஜன. 27

நாட்டின் ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடுகையில் கம்பஹா மாவட்டத்தில் கோவிட் வைரஸின் பரவல் வெகுவாக அதிகரித்துள்ளதாக இராஜாங்க அமைச்சர் விசேட வைத்திய நிபுணர் சுதர்ஷனி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்தார்.

இதற்கடுத்த இடத்தில் கொழும்பு மாவட்டம் காணப்படுவதாக தெரிவித்த அவர், கொரோனாவிலிருந்து திரிபடைந்த ஒமைக்ரோன் வைரஸினாலேயே பரவல் தீவிரமடைந்திருக்கலாமென சந்தேகிக்கப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அறி குறிகள் இல்லாமல் நோயை ஏற்படுத்துதலே ஒமைக்ரோனின் தனித்தன்மையாக கொள்ளப்படினும் அவ்வாறு அறிகுறிகள் தென்படாவிட்டாலும் தொற்றுக்குள்ளானவருக்கோ அல்லது பல்வேறு நோய்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கோ உயிராபத்தும் ஏற்படலாம். நாடு வழமை நிலைமைக்கு திரும்பியதே வைரஸ் பரவல் அதிகரிப்புக்கு காரணமாகும்.

இதேவேளை வைத்தியசாலைகளில் கொவிட் நோயாளிகளின் எண்ணிக்கை நூற்றுக்கு 10 வீதமாகவும் ஒட்சிசன் தேவைப்படுவோர் நூற்றுக்கு 8 வீதமாகவும் அதிகரித்துள்ளது. மேலும் சுகாதார வழிமுறைகளை பின்பற்றாமையும் தொற்று பரவலை அதிகரிக்கின்றது.

தற்போதைய நிலையை கருத்திற்கொண்டு முகக்கவசம் அணிதல் மற்றும் சமூக இடைவெளியை பேணுதல் போன்ற சுகாதார வழிமுறைகளை தொடர்ந்து கடைப்பிடிக்க வேண்டும் - என்றார். (அ)

# சுகாதாரப் பணியாளர்கள் மத்தியில் கோவிட் தொற்று பரவல் அதிகரிப்பு

கொழும்பு, ஜன. 27

சுகாதார பணியாளர்கள் மத்தியில் கோவிட் தொற்று பரவுகை அதிகரித்துள்ளதாக அகில இலங்கை தாதியர் ஒன்றியம் குற்றம் சுமத்தியுள்ளது.

கோவிட் பெருந்தொற்றை கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கமும் சுகாதார அமைச்சும் உரிய நடவடிக்கைகளை எடுக்கத் தவறியுள்ளதாக தாதியர் ஒன்றியத்தின் தலைவர் எச்.எஸ். எம்.பி. மெதிவத்த தெரிவித்துள்ளார்.

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் மூன்று கர்ப்பிணிகள் உள்ளடங்களாக 60 தாதியரும், 150 மருத்துவர்களும் கோவிட் தொற்றுக்கு இலக்காகியுள்ளனர் என அவர் குறிப்பிட்டார்.

கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார் உள்ளிட்ட அனைவரையும் பணிக்கு திரும்புமாறு அரசாங்கம் அண்மையில் அறிவித்திருந்தது.

கோவிட் காரணமாக ஏற்கனவே அரசாங்க சேவைகளில் காணப்பட்ட வரையறைகளை நீக்கி, வழமையான சேவையை அரசாங்கம் அறிவித்திருந்தது.

அரசாங்கத்தின் இந்த நடவடிக்கையினால் சுகாதாரப் பணியாளர்கள் அபாயங்களை எதிர்நோக்க நேரிட்டுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

அனைத்து அரசாங்க ஊழியர்களுக்கும் விடுமுறை வழங்க வேண்டுமென கோரவில்லை எனவும், பாலூட்டும் தாய்மார், கர்ப்பிணிகளுக்கு விடுமுறை வழங்கப்படவேண்டுமெனவும் தொழிற்சங்கம் கோரியுள்ளது.

(அ)

# ‘தலை’கள் மாறாது

கொழும்பு, ஜன. 27

பாராளுமன்றத்தில் செயல்படும் கோப், கோபா மற்றும் இதர குழுக்களின் தலைமைப் பதவிகளுக்கு, முன்னர் இருந்தவர்களையே நியமிப்பதற்கு அரசு திட்டமிட்டுள்ளது.

9 ஆவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடர் ஜனாதிபதியால் டிசெம்பர் மாதம் இடைநிறுத்தப்பட்டது. இதனால் கோப் உள்ளிட்ட குழுக்களின் செயற்பாடுகளும் இடைநிறுத்தப்பட்டன.

புதிய பாராளுமன்றக்கூட்டத்தொடர் ஆரம்பமாகியுள்ள நிலையில் மேற்படி குழுக்களுக்கு புதியவர்கள் நியமிக்கப்படவேண்டும்.

அலரிமாளிகையில் பஸில் ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்ற கூட்டமொன்றில் இது தொடர்பில்ஆராயப்பட்டுள்ளது.

மேற்படி குழுக்களின் தலைவர்களை மாற்றுவதற்கே பாராளுமன்ற அமர்வு நிறுத்தப்பட்டது என எதிரணிகள் குற்றஞ்சாட்டி வருகின்றன. இதனை உண்மையென நிரூபிக்கும் வகையில் நாம் செயற்படக்கூடாது. ஆகவே, கோப், கோபா உள்ளிட்ட குழுக்கள் தலைமைப் பதவி முன்னர் இருந்தவர்களுக்கே வழங்கப்பட வேண்டும் என பஸில் ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார். இதற்கு ஆளுந்தரப்பில் பச்சைக்கொடி காட்டப்பட்டுள்ளது.

அந்தவகையில் சரித ஹேரத், அநுரபிரியதர்சன யாப்பா மற்றும் திஸ்ஸ விதாரண ஆகியோர் தலைமைப் பதவிகளுக்கு நியமிக்கப்படவுள்ளனர். (அ)



# மருத்துவர்கள் பயணித்த கார் மாம்பழம் சந்தியில் புரண்டது!

யாழ்ப்பாணம், ஜன. 27

மருத்துவர்கள் பயணம் செய்த கார் ஒன்று வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீட்டு மதிலுடன் மோதி விபத்துக்கு உள்ளானது.

இந்த விபத்தில் வாகனம் கடுமையான சேதங்களுக்கு உள்ளான நிலையில் அதில் பயணித்தவர்கள் தெய்வாதீனமாக சிறு காயங்களுடன் தப்பினர்.

யாழ்ப்பாணம், அரியாலை - மாம்பழம் சந்திக்கு அருகில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு இந்த விபத்து சம்பவம் இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் - கண்டி நெடுஞ்சாலையில் யாழ்ப்பாணத்தில் இருந்து வேகமாக பயணித்த கார் மாம்பழம் சந்திக்கு அருகில் வேக கட்டுப்பாட்டை இழந்து வீடொன்றின் மதிலுடன் மோதித் தடம்புரண்டது.

இதனை அடுத்து அவ்விடத்தில் கூடியவர்கள் வாகனத்தில் இருந்தவர்களை மீட்டெடுத்தனர். அவர்கள் சிறு காயங்களுக்கு உள்ளாகியிருந்தனர்.

விபத்துக்கு உள்ளானவர்கள் வாகனத்துடன் அங்கிருந்து செல்ல முற்பட்டபோது அங்கிருந்தவர்கள் அதற்கு அனுமதிக்காது பொலிஸாருக்கு அறிவித்தனர்.

இதனை அடுத்து சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் விபத்துக்கு உள்ளான வாகனத்தை பொலிஸ் நிலையம் எடுத்து சென்றதுடன் மேலதிக விசாரணைகளையும் முன்னெடுத்துள்ளனர். (அ-03)

ஈழநாடு
Eelanadu
27.01.2021 வியாழக்கிழமை
பிலவ வருடம், தை 14

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
**தொலைபேசி : 021 730 1370**

## ஈழ - தமிழ்நாடு மீனவர் பிரச்னை?

தமிழ்நாட்டு (இந்தியா) மீனவர்களுக்கும் ஈழ (யாழ்ப்பாண) மீனவர்களுக்கும் இடையிலான பிரச்னை தொடர்ந்தும் சிக்கலானதொரு விடயமாகவே வளர்ந்து வருகின்றது. தற்போது இது வெறுமனே இரண்டு மீனவர்களுக்கு இடையிலான பிரச்னை என்பதையும் தாண்டி, புவிசார் அரசியல் போட்டியில் ஈடுபட்டிருக்கும் இரண்டு ஆசிய சக்திகளான - இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையிலான அதிகார போட்டிக்குள்ளும் சிக்கிக் கொள்ளுமோ என்னும் ஆபத்து ஏற்பட்டிருக்கின்றது.

தற்போதைய கடற்றொழில் அமைச்சர் தனது கட்சியின் பெயரில் ஈழத்தை வைத்திருப்பவராக இருந்த போதிலும் - இந்த சிக்கலான பிரச்னையை கையாளுவதற்கான ஆளுமையோடு அவர் இல்லை. இவ்வாறானதொரு பின்னணியில்தான் தமிழ்நாட்டு மீனவர்களிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்ட படகுகள் தற்போது ஏலத்தில் விடப்பட்டிருக்கின்றன. இது அதிருப்தியுடன் இருக்கின்ற வடபுல மீனவர்களுக்கு உற்சாகத்தை கொடுத்திருக்கலாம். ஆனால், இதுபோன்ற விடயங்களால் பிரச்னையை சாதகமாகக் கையாள முடியுமா?

இரண்டு பகுதி மீனவர்களும் தொப்புள் கொடியுறவுகளாக இருக்கின்றபோதும், இந்த பிச்னைகளை சுமுகமாக தீர்த்துக் கொள்ள முடியாமல் இருப்பது துரதிர்ஷ்டவசமான ஒன்றுதான். சுமந்திரனின் ஏற்பாட்டில் கடலில் ஓர் எதிர்ப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. நீண்ட காலத்திற்கு பின்னர் கவனத்தை ஈர்த்த நடவடிக்கையாக அது இருந்தது. ஆனால், அவ்வாறானதொரு நடவடிக்கைக்கு பின்னர்தான் ஒருபோதுமே தமிழ் மீனவர்களை ஏறெடுத்தும் பார்த்திராத, சீனத் தூதரகம் - உணவுப் பொதிகளோடும் மில்லியன்களோடும் வடக்கிற்கு வந்தது. இந்திய மீனவர்கள் தொடர்பில் கோபத்துடன் இருக்கும் மீனவர்களை சந்தித்து அவர்களுக்கு ஆறுதல் அளிக்கும் வகையில் அவர்களை நெருங்கிச் சென்றது. இதன் மூலம் தங்களால் வடக்கிலும் ஆட்டத்தை ஆரம்பிக்க முடியுமென்னும் செய்தியை இந்தியாவிற்கு சொல்ல முற்பட்டது.

இப்போது இடம்பெற்றுக் கொண்டிருக்கும் விடயங்களை உற்று நோக்கினால் - மீனவர் பிரச்னையை தொடர்ந்தும் எரியும் ஒரு பிரச்னையாக பேணிப் பாதுகாக்கும் நோக்கிலேயே அடிக்கடி வடபுல மீனவர்கள் அடங்கிய குழுவினர் ஆங்காங்கே எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். ஆனால், இவ்வாறான தொடர்ச்சியான நிகழ்வுகள் இதற்கு முன்னர் இடம்பெற்றிருக்கவில்லை. இவ்வாறானதொரு பின்னணியில்தான் தமிழ்நாட்டு மீனவர்களின் படகுகளை ஏலத்தில் விட்டு, தமிழ் நாட்டு மக்களுக்கு எரிச்சலூட்டப்பட்டிருக்கின்றது.

இந்தப் பிரச்னை தொடர்பில் கடலில் கறுப்பு பட்டி பயணம் செய்வதைவிடுத்து, இந்திய மற்றும் தமிழ்நாட்டு அரசாங்கத்துடன் ஆக்கபூர்வமான உரையாடல்களில் தமிழ் தலைவர்கள் ஈடுபட வேண்டும். இப்போது 13ஆவது திருத்தச்சட்டத்தில் ஒன்றுபட்டு நிற்பது போன்று, இந்த பிரச்னை தொடர்பிலும் அனைத்து கட்சிகளும் இணைந்து தமிழ் நாட்டு முதலமைச்சர் மற்றும் தமிழ் நாட்டு மீனவர் சங்க தலைவர்களுடன் ஒரு பேச்சை முன்னெடுக்கலாம். ஏனெனில், இதனை தமிழர் தரப்பே கையிலெடுக்க வேண்டும்.

இதனை மீன்பிடி அமைச்சரிடம் விட்டுவிட்டு அமைதியாக இருந்தால், தமிழ்நாடு - ஈழ உறவே இறுதியில் நெருக்கடிக்குள்ளாகும். அங்குள்ள மக்கள் வடபுல தமிழர்களும் சேர்ந்துதான் தங்களை எதிர்க்கின்றார்கள் என்னும் முடிவுக்கே வருவர். மேலும், கடல் எல்லைகளை திட்டமிட்டு வரையறுப்பதில் சிக்கல்களும் இருக்கலாம். கச்சதீவு இலங்கையின் கட்டுப்பாட்டில் இருப்பதால் இவ்வாறானதொரு பிரச்னை ஏற்படலாம். இது தொடர்பில் ஒரு பொருத்தமான மூலோபாயத்தை தமிழ்த் தேசிய கட்சிகள் தமிழ்நாடு அரசாங்கத்திற்கு பரிந்துரைக்கலாம். இது தொடர்பில் தமிழ் கட்சிகள் அமைதியாக இருக்கக்கூடாது.

# இந்திய கரையோர காவல் படையின் அசமந்தபோக்கால் பாதிப்புறும் இந்திய மீனவர்!

**அலசுவது இராஜதந்திரி**



*இந்தியாவின் 73ஆவது குடியரசு தினத்தை முன்னிட்டு கடல் எல்லையை தாண்டியமைக் காக யாழ்ப்பாணச் சிறையில் சிறை வாசம் அனுபவித்து வந்த 55 இந்திய மீனவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.*

*இந்த விடுதலை குறித்து இந்திய வெளி விவகார அமைச்சர் கலாநிதி எஸ். ஜெய்சங்கர் இந்திய அரசின் நன்றியை இந்திய உயர்ஸ் தானிகர் கோபல் பாக்லே மூலமாக இலங்கை அரசுக்கு தெரிவித்துள்ளார்.*

*ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றம் இலங்கை கடற்பரப்புக்குள் பிரவேசித்த காரணத்தால் கடற்படையினர் கைது செய்த இந்திய மீனவர்கள் 55 பேரையும் நேற்று முன்தினம் விடுதலை செய்திருந்தது.*

*இந்திய - இலங்கை மீனவர்களின் கடல் எல்லைப்பிரச்னை தொடர்பாக 1974ஆம் ஆண்டிலும் 1976ஆம் ஆண்டிலும் காலஞ்சென்ற பிரதமர் சிறிமாவோ பண்டார நாயக்காவின் ஆட்சிக்காலத்தில் இரு ஒப்பந்தங்கள் செய்யப்பட்டன. ஆனால், இந்த இரு ஒப்பந்தங்களும் அரசியல் ரீதியானவையாக இருந்தனவே தவிர இரு நாட்டு மீனவர்களையும் அணுகி ஆராய்ந்து கொண்டுவரப்பட்டவையாக இருக்கவில்லை. இதன்காரணமாக இரு நாட்டினதும் அப்பாவி மீனவர்கள் அடிக்கடி பிரச்னைகளுக்கு உள்ளாகி வருகின்றனர்.*

*இந்திய - இலங்கை மீனவர்களின் சர்ச்சைக்குள்ளாகியுள்ள வங்காள விரிகுடாவை அண்டிய பாக்கு நீரிணைப் பிரதேசம் 137 கிலோ மீற்றர் நீளமும், 67 கிலோ மீற்றர் அகலமுடையதாகவும் விளங்குகின்றது.*

*இந்த கடல் நீர்பரப்பு ஐந்து தமிழ்நாடு மாவட்டங்களையும், யாழ்ப்பாணம், மன்னார் ஆகிய இரு இலங்கை மாவட்டங்களையும் அண்டியதாக இருக்கின்றது. இலங்கையில் இடம்பெற்ற மூன்று தசாப்த கால வடக்கு - கிழக்கு யுத்தம் காணமாக வடக்கு - கிழக்கு மீனவர்களே பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தனர்.*

*இரு தலைக்கொள்ளி எறும்புகள் போன்று ஒருபுறம் இலங்கை கடற்படையின் கெடுபிடிகளாலும் மறுபுறம் ஆயுதப் போராட்ட அமைப்புகளின் கெடுபிடிகளுக்கும் வடக்கு - கிழக்கு மீனவர் கள் உள்ளாகியிருந்தனர்.*

*வடபகுதி மீனவர்களுக்கு கடலுக்கு செல்ல அனுமதி மறுக்கப்பட்ட அதேசமயம், ஆயுதப் போராட்ட அமைப்புகளால் அவர்களின் படகுகள் மற்றும் படகு இயந்திரங்கள் என்பவையும் அபகரிக்கப்பட்ட சம்பவங்களும் இடம்பெற்றிருந்தன.*

*அதீத கெடுபிடிகள் காணமாக பல வடபகுதி மீனவர்கள் கடலில் உயிரிழந்த சம்பவங்களும் இடம்பெற்றிருந்தன. இலங்கையில் வடக்கு - கிழக்கு மீனவர்கள் யுத்தத்தால் பாதிப்புற்றிருந்த அதேசமயம் இந்திய மீனவர்கள் எல்லை மீறி வடகடலில் மீன் பிடித்த சம்பவங்களும் இடம்பெற்றிருந்தன.*

*இருந்தபோதிலும் தற்போது வடக்கு - கிழக்கு யுத்தம் முடிவுற்று வடபகுதி மீனவர்கள் மீளவும் தமது வாழ்வாதாரத்தை கட்டியெழுப்ப முன்வந்துள்ள தருணத்திலேயே இந்திய மீனவர்களின் இடையறாத ஊடுருவல்கள் வடபகுதி மீனவர்களுக்கு பலத்த சவால்களை ஏற்படுத்தியுள்ளன.*

*இந்திய மீனவர்களின் ஊடுருவல்கள் பெரிதும் நெடுந்தீவு மற்றும் கச்சதீவு கடல்பகுதிகளை அண்டியவையாகவே இருக்கின்றன.*

*இந்திய மீனவர்களை இந்திய - இலங்கை கடல் எல்லைகளில் தடுத்து நிறுத்தி அவர்களை எல்லை தாண்டாது தடுக்கும் நடவடிக்கைகளை இந்திய கரையோர பாதுகாப்பு படையினரால் மேற்கொள்ள முடியும். கடல் எல்லைகளைப் பாதுகாத்தல், கள்ளக்கடத்தல் நடவடிக்கைகள், போதை வஸ்துக்கடத்தல் மற்றும் அனர்த்தத்துக்குள்ளாகும் மீனவர் உட்பட கடல் பயணிகளை காப்பாற்றுதல் போன்ற நடவடிக்ககைகளையே இந்திய கரையோர பாதுகாப்பு படை மேற்கொள்கின்றது.*

*இதுதவிர, ஆண்டுதோறும் இந்திய கரையோர பாதுகாப்புபடை இலங்கை கடற்படையுடன் இணைந்து SLINEX ( Sri Lanka India Exercise) என்று பெயரிடப்பட்ட ஒத்திகைகளையும் நடத்தி வருகின்றது. இந்த ஒத்திகையின் பிரதான நோக்கம் கடல் எல்லைகளை பாதுகாத்தல் சட்டவிரோத நடவடிக்கைகளை தடுத்தல் என்பவையாகவே இருக்கின்றது. இந்த ஒத்திகையில் பங்கேற்கும் இந்திய கரையோர பாதுகாப்பு படையின் கப்பல்கள் இலங்கை கடற்படைக் கப்பல்களை விட பெரிதானவையும் நவீன வசதிகளையும் கொண்டவையாகவும் இருக்கின்றன. எனவே, ஆண்டுதோறும் இடம்பெறுகின்ற இந்த ஒத்திகையின் அடிப்படையில் இந்திய மீனவர்களின் எல்லை தாண்டும் பிரச்னைகளுக்கு இந்திய கரையோர காவல் படையால் சிறந்த தீர்வுகளை எட்ட முடியும். ஆனால, இந்திய கரையோர காவல் படை இது விடயத்தில் அசமந்தமாக இருப்பதே இந்திய மீனவர்களின் வடகடல் பிரச்னைகளுக்கு பிரதான காரணமெனவும் குறிப்பிடமுடியும்.*

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






**மேடம்**
எதிர்பாராத வேகத்தில் சந்தோஷம் அளிக்கும் விஷயம் நடக்கும். எதிர்காலம் பற்றிய கவலை ஒன்று நீங்கும். மகிழ்ச்சி கூடும். அரசாங்க நன்மைக்காக முனைப்பாக முயற்சி செய்வீர்கள்.

**இடபம்**
எதிர்பாராத நன்மை ஒன்று வந்து குடும்பதை மகிழ்விக்கும். எதிர்பார்த்த வங்கி கடன் கிடைத்து புதிய முயற்சியை துவங்குவீர்கள். பிறருக்கு உதவி செய்து மகிழ்ச்சி அடைவீர்கள்.

**மிதுனம்**
இன்று உங்களுக்கு சந்தோஷமும் கோபமும் ஒரு சேர வரும். பணியாளர்களுக்கு கூடுதல் வருமானத்திற்கு வழி கிடைக்கும். புண்ணியச் செயலில் ஈடுபடுவதால் மன அமைதி வரும்.

**கடகம்**
பல நாள் கழித்து மனதில் நிம்மதியும், அமைதியும் நிலவும். பழைய நண்பர்களை சந்தித்து பேசி மகிழ்ச்சி அடைவீர்கள். நீண்ட காலமாக கஷ்டப்படுத்திய சிரமம் இன்று நீங்கும்.

**சிம்மம்**
பழைய தவறுகளை மாற்றிக் கொள்ளும் செயல்களை செய்வீர்கள். முயற்சி வெற்றி தரும். ஆரோக்கியம் மேம்படும். கவலை தீரும். வாழ்க்கைத் துணைக்கு வெற்றியும் லாபமும் வரும்.

**கன்னி**
இது வரை மனதில் இருந்த பயத்தை நண்பர் நீக்குவார். வீண் அலைச்சல், செலவுகள் இருக்கும். குடும்பப் பிரச்னை தீரும். பணியாளர்களுக்கு போராடி நன்மை அடைந்த நிலை மாறும்.

**துலாம்**
பணியில் சிறு சாதனை செய்வதால் உங்களை நிறுவனம் பாராட்டும். மனதை வாட்டிய பயம் தீரும். பேச்சில் கவனம் தேவை. வலிய வரும் பிரச்னைகளை வென்று நிம்மதி பெறுவீர்கள்.

**விருட்சிகம்**
சலிப்பு ஏற்படுத்திய விஷயத்திற்கு இன்று தீர்வு காண்பீர்கள். நீண்ட காலப் பகை ஒன்று முடிவுக்கு வருவதால் துயர் நீங்கும். உங்களின் சாதனை காரணமாக மதிப்பும், மரியாதையும் கூடும்.

**தனுசு**
மனதில் மகிழ்ச்சி நிலவும். புதிய நட்பு அறிமுகமாகும். பிறரிடம் விட்டுக்கொடுத்துச் சென்று வாழ்த்துப் பெறுவீர்கள். பேச்சினால் யாரையும் புண்படுத்தாதபடி கவனமாக இருங்கள்.

**மகரம்**
ஆரோக்கியம் மேம்படும். உழைப்பு உங்களை உயர வைக்கும். குடும்பம் விரிவாகும். பகையான இருவரை இணைத்து வைப்பீர்கள். இன்று நல்லதே நடக்கும். தந்தை வழி உறவினர் சந்திப்பு உண்டு.

**கும்பம்**
சகபணியாளர்களுக்கு உதவி செய்து அவர்களை நெகிழ வைப்பீர்கள். குழந்தைகளுக்கு தேவையான பொருட்களை வாங்குவீர்கள். முன் னேறிச் செல்வதற்கான முயற்சியில் மனம் குவியுங்கள்.

**மீனம்**
புதிய செலவு ஒன்று எதிர்பாராதபடி வரும். பேச்சில் கவனம் தேவை. வயதானோருக்கு நன்மை வரும். புதிய வீடு வாங்குவீர்கள். பழி ஏற்படுத்தும் செயல் எதையும் செய்துவிட வேண்டாம்.

# சென்னை குடியரசு தின விழாவில் பங்கேற்ற மத்திய அரசு நிராகரித்த அலங்கார ஊர்தி



சென்னை, ஜன. 27

மத்திய அரசு நிராகரித்த தமிழக அலங்கார ஊர்தி, சென்னையில் நேற்று நடந்த குடியரசு தின விழாவில் ஊர்வலம் வந்தது.

இந்தியாவின் 73ஆவது குடியரசு தின விழா நேற்று கொண்டாடப்பட்டது. இதையொட்டி சென்னை மெரினா காமராஜர் சாலையில் ஆளுநர் ஆர்.என்.ரவி, முதல்முறையாக தேசியக் கொடியை ஏற்றி வைத்து, அணிவகுப்பு மரியாதையை ஏற்றார்.


பின்னர், மத்திய அரசால் நிராகரிக்கப்பட்ட தமிழக அலங்கார ஊர்தி உள்ளிட்ட பல்வேறு ஊர்திகளும் அணிவகுத்து வந்தன.

டில்லி குடியரசு தின விழாவில் பங்கேற்க உருவாக்கப்பட்ட தமிழக ஊர்தி மத்திய அரசால் நிராகரிக்கப்பட்ட நிலையில் அந்த ஊர்தி தமிழகம் முழுவதும் நேற்று முதல் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்படுகிறது. அந்த நிகழ்வை நேற்று நண்பகல் முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.

இந்த ஊர்தி மூன்று ஊர்திகளாக பிரிக்கப்பட்டு அனுப்பப்படுகிறது. முதல் ஊர்தியில் வீரமங்கை வேலு நாச்சியாரின் சிலையும், மகாகவி பாரதியாரின் சிலை இன்னொரு ஊர்தியிலும், வ.உ.சிதம்பரனார் உள்ளிட்ட தலைவர்கள் அடங்கிய மூன்றாவது ஊர்தியும் முதல்வரால் கொடியசைத்து மாநிலம் தழுவிய பயணத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

# மீனவர்கள் விடுதலை மகிழ்ச்சி; படகுகளையும் மீட்க வேண்டும்!

## அன்புமணி வலியுறுத்தல்



சென்னை, ஜன. 27

இலங்கை சிறையில் அடைக்கப்பட்டிருந்த தமிழக மீனவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளது மகிழ்ச்சி, அவர்களின் படகுகளும் விடுவிக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என பா.ம.க. இளைஞரணித் தலைவர் அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து இன்று அவர் தனது டுவிட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

“இலங்கை சிறைகளில் கடந்த டிசம்பர் 18ஆம் திகதி முதல் வாடிக் கொண்டிருந்த தமிழக மீனவர்கள் 56 பேர் விடுதலை செய்யப்பட்டிருப்பது மகிழ்ச்சியளிக்கிறது. அவர்களை விடுதலை செய்ய நடவடிக்கை மேற்கொண்ட வெளியுறவுத்துறை அமைச்சகத்துக்கு நன்றியும், பாராட்டுகளும்!

மீனவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ள நிலையில் அவர்களின் படகுகளும், ஏற்கெனவே பறிமுதல் செய்யப்பட்ட படகுகளும் விடுவிக்கப்படவில்லை. இலங்கை அரசிடம் பேசி அந்நாட்டு அரசால் பறிமுதல் செய்யப்பட்டுள்ள அனைத்து படகுகளையும் மத்திய அரசு மீட்க வேண்டும்!

மீனவர்கள் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணும் வகையில் இரு நாட்டு மீனவர்களுக்கு இடையிலான பேச்சுக்களை மீண்டும் தொடங்கவும், இந்தியா-இலங்கை ஐந் தாவது கூட்டு பணிக்குழு கூட்டத்தை விரைந்து நடத்தவும் மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்!” இவ்வாறு அன்புமணி ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

# எம்.ஜி.ஆரின் சிலையை பெயர்த்தெறிந்தவர் கைது

தஞ்சாவூர், ஜன. 27

தஞ்சாவூரில் எம்ஜிஆர் சிலையை பீடத்தில் இருந்து பெயர்த்தெடுத்து கீழே போட்டுவிட்டுச் சென்ற நபரை பொலிஸார் கைது செய்தனர்.

தஞ்சாவூர் வடக்கு வீதியில் அ.தி.மு.க. சார்பில் மறைந்த முன்னாள் முதல்வர் எம்ஜிஆரின் அமைக்கப்பட்டிருந்தது. நேற்று முன்தினம் காலை பீடத்தில் இருந்து பெயர்க்கப்பட்ட எம்ஜிஆர் சிலை அருகே உள்ள கடையின் அருகே, கீழே கிடந்தது தெரியவந்தது. அதன் பின்னர், அதிமுகவினர் அதே பீடத்தில் எம்ஜிஆர் சிலையை மீண்டும் வைத்து சீரமைத்தனர்.

எம்ஜிஆர் சிலை அருகே இருந்த கடை ஒன்றில் பொருத்தப்பட்ட கண்காணிப்பு கமராவை ஆய்வு செய்தனர். விசாரணையில், அந்த நபர், தஞ்சாவூர் வடக்குவாசல் கல்லறை மேட்டுத் தெருவைச் சேர்ந்த மரப்பட்டறை கூலித் தொழிலாளி என்பதும், மதுபோதையில் இந்தச் செயலில் அவர் ஈடுபட்டதும் தெரியவந்தது.

# தமிழக மீனவர்கள் மீது மீண்டும் கடற்கொள்ளையர்கள் தாக்குதல்

நாகை, ஜன. 27

தமிழக மீனவர்கள் மீது இலங்கை கடற்கொள்ளையர்கள் மீண்டும் தாக்குதல் நடத்தி உள்ளதாக நாகை பகுதி மீனவர்கள் தெரிவித்தனர்.

நாகையில் இருந்து மீன்பிடிக்கச்சென்ற மீனவர்கள் மீது ஆறுகாட்டுத்துறை கடற்பகுதியில் அரிவாள், ரப்பர் பைப், கட்டையால் தாக்கி இலங்கை கடற்கொள்ளையர்கள் அட்டூழியத்தில் ஈடுபட்டுள்ளனர்.

கடற்கொள்ளையர்கள் தாக்குதலில் காயமடைந்த 4 மீனவர்கள் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். படகில் இருந்த ஜிபிஎஸ் கருவி, கைப்பேசி, மீன்கள் உள்ளிட்ட பொருட்களை பறித்து விட்டு விரட்டியடித்துள்ளனர்.

நாகையில் இருந்து மீன்பிடிக்கச்சென்ற மீனவர்கள் மீது இலங்கை கடற்கொள்ளையர்கள் தாக்குதல் நடத்தி உள்ளது பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. ஏற்கனவே நாகை மாவட்டம் புஷ்பவனம் மீனவர்கள் மீது இலங்கை கடற்கொள்ளையர்கள் தாக்குதல் நடத்தி உள்ளனர்.

# ஆழ்கடல் மீன்பிடி என்ற போர்வையில் போதைப்பொருள்கள் கடத்தலில் பலர்!

## கடும் தண்டனை வழங்கப்படுமென பாதுகாப்புச் செயலர் எச்சரிக்கை

கொழும்பு, ஜன. 27

ஆழ்கடல் மீன்பிடியில் ஈடுபடும் பாணியில் போதைப்பொருள் கடத்தல் போன்ற குற்றச் செயல்களில் ஈடுபட வேண்டாமென கடற்றொழிலாளர்களிடம் வேண்டுகோள் விடுத்த பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் கமல் குணரட்ன, அவ்வாறனவர்கள் சட்டத்துக்கு முன் நிறுத்தப்பட்டு கடுமையாக தண்டிக்கப்படுவதுடன் வாழ்நாள் முழுவதும் சிறைக்குள் வாடும் நிலை உருவாகுமென்றும் எச்சரிக்கை விடுத்தார்.

அத்துடன் சட்டவிரோதமாக கடத்தப்படும்போது கைப்பற்றப்படும் போதைப்பொருட்களில் விசாரணைக்கான ஒரு தொகையை மாத்திரம் வைத்துவிட்டு ஏனையவைகளை நீதிவான் முன்னிலையில் உடனடியாக அழிப்பது தொடர்பில் தற்போது நடைமுறையிலுள்ள சட்டத்தில் பல்வேறு சிக்கல்கள் காணப்படுவதால் அவை மறுசீரமைக்கப்பட்டு வெகுவிரைவில் புதிய சட்டம் கொண்டுவரப்படவுள்ளதாகவும் அவர் கூறினார்.

இது தொடர்பான சட்ட மறுசீரமைப்பு மற்றும் சட்ட வரைவை தயாரிக்கும் பணியில் நீதி அமைச்சு, சட்ட மாஅதிபர் திணைக்களம் மற்றும் சட்ட வரைஞர் திணைக்களம் உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாக அவர் மேலும் கூறினார்.

இதேவேளை, மீன்பிடிக்கும் பாணியில் போதைப் பொருள் கடத்தல் போன்ற குற்றச் செயல்களில் ஈடுபடவேண்டாம் என்று மீனவர்களிடம் வேண்டுகோள் விடுத்த பாதுகாப்புச் செயலாளர், அவ்வாறானவர்கள் சட்டத்துக்கு முன்கொண்டு செல்லப்பட்டு கடுமையாக தண்டிக்கப்படுவர் என்றும் அவர் தெரிவித்தார்.




சட்டவிரோதமாக நாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட இரண்டு மீன்பிடி படகுகளை தென்பகுதி ஆழ்கடலில் வைத்து கைப்பற்றிய இலங்கை கடற்படையினர் அதில் மறைத்து வைக்கப்பட்டிருந்த சுமார் 350 கிலோ ஹெரோயினுடன் 11 சந்தேக நபர்களையும் கைது செய்திருந்தனர்.

ஹெரோயினுடன் இவ்வாறு கைப்பற்றப்பட்ட படகுகள் சந்தேக நபர்களுடன் கொழும்பு துறைமுகத்திற்கு நேற்று முன்தினம் கொண்டுவரப்பட்டது டன் பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் கமல் குணரட்ண மற்றும் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் நிஷாந்த உலுகே தென்ன ஆகியோர் தலைமையிலான குழுவினர் நேரில் பார்வையிட்டனர்.

இதன்போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த பாதுகாப்புச் செயலாளர் மேலும் விளக்கமளிக்கையில்-

அரச புலனாய்வு சேவை, பொலிஸ் போதைப் பொருள் தடுப்பு பிரிவினருக்கு கிடைத்த புலனாய்வுத் தகவல்களின் அடிப்படையில் இலங்கை கடற்படையின் சமுத்திர கப்பல் சுமார் ஆயிரம் கடல் மைல்களுக்கு அப்பால் ஆழ்கடலில் கடந்து இரு வாரங்களாக மேற்கொண்ட கண்காணிப்பு நடவடிக்கையின் பிரதிபலனாக சுமார் 350 கிலோ ஹெரோயின் போதைப் பொருட்களை கைப்பற்றியுள்ளதுடன் 11 உள்ளூர் சந்தேக நபர்களையும் கைது செய்துள்ளனர்.

இவர்களிடம் மேற்கொண்ட விசாரணைகளின் பிரகாரம் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடுவது போன்று இரு மீன்பிடிப் படகுகளில் சென்றுள்ளனர். இவற்றில் ஒரு படகு வெளிநாட்டிலிருந்து கொண்டுவரப்பட்ட மேற்படி போதைப் பொருளை ஆழ்கடலில் வைத்து தமது மீன்பிடிப் படகுக்கு மாற்றியுள்ளதுடன் மற்றைய படகு அவற்றை கொண்டுவர சென்றுள்ள நிலையிலேயே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கடல் மார்க்கமாக நாட்டுக்குள் கொண்டுவரப்படவுள்ள போதைப் பொருட்களை முற்றாகத் தடுத்து நிறுத்த தேவையான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளோம். கடந்த காலங்களிலும் பல்லாயிரம் கிலோ கைப்பற்றியுள்ளோம்.

போதைப் பொருட்களை நாட்டுக்குள் கொண்டு வருபவர்கள் குற்றவாளிகள். எமது நாட்டை சீர்குலைக்க முயற்சிப்பவர்கள். இவ்வாறானவர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்க நாங்கள் ஒருபோதும் தயங்கப் போவதில்லை. இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் சட்ட அமுலாக்கல் தரப்பினர்களிடம் கையளிக்கப்படுவர்.

கைப்பற்றப்படும் போதைப் பொருள்களை உடனடியாக அழிப்பதில் தற்போது நடைமுறையிலுள்ள சட்டத்தில் பெரும் சட்டச்சிக்கல்கள் காணப்படுகின்றன.

தற்போது கைப்பற்றப்படும் போதைப் பொருட்கள் நீதிமன்ற விசாரணைகள் முடியும் வரை களஞ்சியப்படுத்தப்படுத்தப்பட்டு வருகின்றன.

இந்நிலையிலேயே இவற்றில் கைப்பற்றப்படும் சட்டவிரோத போதைப் பொருட்களில் விசாரணைக்கான ஒரு தொகையை மாத்திரம் வைத்துவிட்டு ஏனையவைகளை நீதிமன்ற அனுமதியுடன் நீதிவான் ஒருவரின் முன்னிலையில் உடனடியாகஅழிப்பதற்கு கடந்த ஒரு வருடகாலமாக திட்டமிட்டு வருகின்றோம்.

இவற்றை அமுல்படுத்த தற்போது நடைமுறையிலுள்ள சட்டத்தில் முழுமையான மாற்றம் கொண்டுவர வேண்டும். இந்நிலையிலேயே சட்டம் மறுசீரமைக்கப்பட்டு வெகுவிரைவில் புதிய சட்டம் கொண்டு வரப்படவுள்ளது-என்றார். (அ)

## வாகன விபத்துகளில் சிக்கி பொலிஸார் உட்பட 4பேர் பலி!

கொழும்பு, ஜன. 2

நாட்டின் பல பகுதிகளில் இடம்பெற்ற வாகன விபத்துக்களில் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் உட்பட நால்வர் உயிரிழந்துள்ளனர்.

தலங்கம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொஸ்வத்தை டென்சில் கொப்பேக்கடுவ மாவத்தையில் மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கு அருகில் இடம்பெற்ற வாகன விபத்தில் 27 வயதான பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மோட்டார் சைக்கிளில் பயணித்த குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி கவிழ்ந்து விபத்துக்கு உள்ளாகி உள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் கரந்தகொல்ல பிரதேசத்தைச் சேர்ந்தவர் எனவும், மேல் மாகாண தெற்கு போக்குவரத்துப் பிரிவில் கடமையாற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் எனவும் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இதேவேளை, மீகொட பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாவலமுல்ல - லெனகல வீதியின் நாவலமுல்ல பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் 48 வயதுடைய நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

லெனகல நோக்கி பயணித்த ஓட்டோ கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி விபத்துக்கு உள்ளாகி உள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, திம்புலபத்தனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மவுண்ட்வர்நாத்தின் மேல் பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் 37 வயதுடைய நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, வெலிகேபொல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கபுகல ரஜவக வீதியில் டிப்பர் வாகனம் தொழில் நுட்பக் கோளாறு காரணமாக கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி மரத்தில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தில் பலாங்கொடை, மகுனமலை பகுதியைச் சேர்ந்த 50 வயதுடைய ஒருவர் உயிரிழந்துள்ளார். (அ)

## புலோலி சூசையப்பர் ஆலய சிலைகள் உடைக்கப்பட்டன!

யாழ்ப்பாணம், ஜன. 27

வடமராட்சியின் புலோலி சூசையப்பர் தேவாலயத்தின் சிலைகள் அடையாளம் தெரியாதோரால் அடித்து உடைக்கப்பட்டுள்ளன.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் மாலை நடைபெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட் டுள்ளது.

பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ-2)

## பூஸ்டர் தடுப்பூசி வழங்குவதில் மத்திய மாகாணம் முதலிடம்!

கொழும்பு, ஜன. 27

கோவிட் தொற்றுப் பரவலைத் தடுப்பதற்காக பூஸ்டர் தடுப்பூசி வழங்குவதில் மத்திய மாகாணம் முதல் இடத்தில் உள்ளதாக மாகாண ஆளுநர் லலித் யூ. கமகே தெரிவித்துள்ளார்.

மாகாண கோவிட் தடுப்பு செயலணியின் மீளாய்வுக் கூட்டத்தில் அவர் மேற்படி தகவலை தெரிவித்தார்.

ஏனைய மாகாணங்களுடன் ஒப்பிடுகையில், இங்கு அறுபது வயதுக்கு மேற்பட்டவர்களில் 90 சதவீதமானவர்களுக்கு பூஸ்டர் தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது.

மேலும் 30 முதல் 60 வரையிலான வயதெல்லைக்கு உட்பட்டவர்களில் அரை வாசிப்பேர் வரை பூஸ்டர் தடுப் பூசி பெற்றுள்ளதாக ஆளுநர் குறிப்பிட்டார். மத்திய மாகாணத்தைப் பொறுத்தவரையில், சிவனொளி பாதமலை யாத்திரை செல்லும் அடியார்கள், உள்நாட்டு - வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் ஆகியோ ரின் நடமாட்டம் அதிகமாக இருக்கிறது. எனவே, சுகாதார அதிகாரிகள் விழிப்புடன் இருக்க வேண்டும் என மத்திய மாகாண ஆளுநர் ஆலோசனை வழங்கினார்.

இந்நிகழ்வில் மத்திய மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் நிஹால் வீரசூரிய, மத்திய மாகாண சபையின் பிரதம செயலாளர் காமினி ராஜரட்ன, மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் பீ.எச். என். ஜய விக்ரம ஆகியோரும் பங்கேற்றனர். (அ)

## மருத்துவ ஆய்வக தொழில்நுட்ப வல்லுநர் சங்கம் புறக்கணிப்பில்!

கொழும்பு, ஜன. 27

மேல் மாகாணத்தில் உள்ள அனைத்து வைத்தியசாலைகளிலும் நேற்றுக் காலை 7 மணி முதல் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தை அரச மருத்துவ ஆய்வக தொழில்நுட்ப வல்லுநர்கள் சங்கம் ஆரம்பித்துள்ளது. நிலவும் சம்பள முரண்பாடுகளை தீர்க்க எந்தத் தரப்பினரும் தலையிடாமைக்கு எதிர்ப் புத் தெரிவிக்கும் வகையில் இந்த பணிப்புறக்கணிப்பு முன்னெடுக்கப்படுவதாக அதன் தலைவர் ரவி குமுதேஷ் தெரிவித்தார். (அ)

## ஐ.டி.எச் வைத்தியசாலையில் சிகிச்சை பெறும் கொரோனா நோயாளர் எண்ணிக்கை உயர்வு!

கொழும்பு, ஜன. 26

தேசிய தொற்று நோயியல் நிறுவகத்தில் சிகிச்சை பெற்று வரும் கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக அந்த வைத்தியசாலையின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனால், அந்த மருத்துவமனையின் சிகிச்சை பிரிவின் அதிகபட்ச கொள்ளளவை தற்போது எட்டியுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, நாட்டில் மேலும் 891 பேருக்கு நேற்று முன் தினம் கோவிட்-19 தொற்றுறுதியானது.

இதன்படி, தொற்றுறுதியானவர்களின் மொத்த எண்ணிக்கை 6 இலட்சத்து மூவாயிரத்து 654 ஆக உயர்வடைந்துள்ளதென அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேநேரம், நாட்டில் மேலும் 17 பேர் கோவிட்-19 தொற்றினால் கடந்த திங்கட்கிழமை மரணித்தனர். சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உறுதிப்படுத்தலு டன் அரசாங்க தகவல் திணைக்களம் நேற்று அறிக்கை வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, இதுவரை பதிவான கோவிட்-19 மரணங்களின் மொத்த எண்ணிக்கை 15 ஆயிரத்து 330 ஆக உயர்வடைந்துள்ளது.

அதேவேளை, 11 ஆயிரத்து 784 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர். (அ)

# சம்பிக்க எவ்வழியில் சென்றாலும் சஜித்தான் ஜனாதிபதி வேட்பாளர்!

## ஐக்கிய மக்கள் சக்தி திட்டவட்டம்

கொழும்பு, ஜன. 27

**ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸதான். இதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை _ என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் மீண்டும் திட்டவட்டமாக அறிவித்துள்ளனர்.**

ஐக்கிய மக்கள் சக்தி ஊடாக போட்டியிட்டு, பாராளுமன்றத்துக்கு தெரிவான முன்னாள் அமைச்சர் சம்பிக்க ரணவக்க 43 ஆம் படையணி எனும் அரசியல் இயக்கத்தை உருவாக்கியுள்ளார்.

அதனை பலப்படுத்தி வருகின்றார். அண்மையில் மாநாடொன்றையும் நடத்தியிருந்தார்.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலை இலக்கு வைத்தே சம்பிக்க இவ்வாறு செயற்படுகின்றார் என அரசியல் வட்டாரங்களில் கதை அடிபடுகின்றது.

இந்நிலையில் இது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் சிலர்,

“சம்பிக்க எம்முடனேயே இருக்கின்றார். அவர் தனி அணியொன்றை உருவாக்கினால்கூட அது எமக்கு பலமாகவும், அரசுக்கு பாதிப்பாகவுமே அமையும். யார் எப்படியான அரசியல் நகர்வை முன்னெடுத்தாலும் ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித்தான்-என்றனர். (அ)

## கோழி இறைச்சி, முட்டையின் விலை வீழ்ச்சி

கொழும்பு, ஜன. 26

அண்மைய காலங்களில் சந்தையில் அதிகரித்திருந்த கோழி இறைச்சி மற்றும் முட்டை என்பனவற்றின் விலைகள் வீழ்ச்சியடைந்துள்ளன.

27 ரூபா வரை அதிகரித்திருந்த முட்டை விலை, தற்போது 21 ரூபா வரையில் வீழ்ச்சியடைந்துள்ளதாக கால்நடை வளங்கள், பண்ணை மேம்பாட்டு, பால் மற்றும் முட்டை சார்ந்த கைத்தொழில்கள் இராஜாங்க அமைச்சர் டீ.பி. ஹேரத் தெரிவித்தார்.

மின்சாரம் தொடர்பான பிரச்னை கால்நடை பராமரிப்பிலும் தாக்கம் செலுத்துவதாக கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் சுட்டிக்காட்டினார்.

இதுபோன்ற நிலைமைகளில், மின்பிறப்பாக்கியைப் பயன்படுத்தி, குறித்த செயற்பாடுகளை முன்னெடுக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அதேநேரம், இலங்கையில் முட்டை உற்பத்தியை அதிகரிக்க, தீர்வை வரியின்றி விலங்கு உணவை இறக்குமதி செய்ய நிதி அமைச்சர் அனுமதி வழங்கியுள்ளார்.

இதற்கமைய, தீர்வை வரியற்ற விலங்குணவு கள் கொண்டுவரப்பட்டு, பண்ணைகளுக்கு அவை வழங்கப்பட்டுள்ளன.

எனவே, உற்பத்தியாளர்கள், இறைச்சி மற்றும் முட்டை என்பனவற்றின் விலைகளை தாமாகவே குறைத்துள்ளனர் என இராஜாங்க அமைச்சர் டீ. பி.ஹேரத் தெரிவித்தார். (அ)

## ஊழல் மதிப்பாய்வு சுட்டியில் இலங்கைக்கு 102 ஆவது இடம்

கொழும்பு, ஜன. 27

ட்ரான்ஸ்பரன்சி இன்டர் நஷனல் சர்வதேச நிறுவனத்தினால் தொகுக்கப்பட்ட 2021 ஆம் ஆண்டுக்கான ஊழல் மதிப்பாய்வுச் சுட்டியில் இலங்கை 102 ஆவது இடத் தைப் பிடித்துள்ளது.

ஒரு தசாப்தகாலமாக ஊழல் நிலையில் எவ்வித முன்னேற்றகரமான மாற்றங்க ளையும் அடையிவில்லை என் பதை 2021 ஆம் ஆண்டுக் கான ஊழல் மதிப்பாய்வுச் சுட்டி வெளிப்படுத்துகின்றது

ட்ரான்ஸ்பேரன்சி இன்டர் நஷனல் சர்வதேச நிறுவனத்தினால் தொகுக்கப்பட்ட சமீபத்திய ஊழல் மதிப் பாய்வுச் சுட்டியானது (CORRUPTION PERCEPTIONS INDEX) நேற்று வெளியிடப்பட்டது.

ட்ரான்ஸ்பரன்சி இன்டர் நஷனல், உலகெங்கிலுமுள்ள 180 நாடுகள் மற்றும் ஆட்சி எல்லைக்குள் இடம் பெறுகின்ற பொதுத் துறை ஊழல்களின் அடிப்படை யில் மதிப்பாய்வு செய்யப்படுகின்றது.

இங்கு வழங்கப்பட்ட புள்ளிகளானது நிபுணர்களின் கருத்துக்களையும் வர்த்தக சமூகத்தினரின் கருத்துக் கணிப்புக்களையும் பிரதிபலிக்கிறது.

உலக வங்கி, உலகப் பொரு ளாதார மன்றம், தனியார் இடர் மற்றும் ஆலோசனை வழங்கும் நிறுவனங்கள், சிந்தனைக் குழுக்கள் உட்பட 13 வெளிவாரியான தரவுகளை பயன்படுத்தியே ட்ரான்ஸ்பரன்சி இன்டர்நஷனல் மதிப்பாய்வு செய்யப்பட்டுள்ளது.

ட்ரான்ஸ்பரன்சி இன்டர் நஷனல் மதிப்பாய்வானது அதன் புள்ளி வழங்கும் முறை யினை 0 தொடக்கம் 100 வரை வடிவமைத்துள்ளது. 100 புள்ளிகள் என்பது ஊழ லற்ற தூய்மையான நிலையினையும் 0 புள்ளி என்பது கூடிய ஊழல் நிலையினையும் குறிப்பிடுகிறது.

2021 ஆம் ஆண்டிற்கான ட்ரான்ஸ்பரன்சி இன்டர்நஷனல் மதிப்பாய்வில் இலங் கைக்கு 37 புள்ளிகள் வழங்கப்பட்டுள்ளது. இது முன்னைய ஆண்டினை விட ஒரு புள்ளி குறைவானதாகும் (38). அதன டிப்படையில் தரவரிசையில் 2020 ஆம் ஆண்டு 94 ஆம் இடத்திலிருந்த இலங்கை 2021 ஆம் ஆண்டு 102 ஆம் நிலைக்கு வீழ்ச்சி கண்டுள் ளது.

கடந்த 10 ஆண்டுகளில் இலங்கையின் ட்ரான்ஸ் பரன்சி இன்டர்நஷனல் மதிப்பாய்வானது ஒப்பீட்ட ளவில் ஒரே மாதிரியாகவே காணப்படுகிறது. 2016 ஆம் ஆண்டு பதிவாகிய 36 புள்ளி கள் குறைந்த மதிப்பீடாகவும் 2012 ஆம் ஆண்டு பதிவாகிய 40 புள்ளிகள் இலங்கையின் அதிகபட்ச புள்ளியாகவும் விளங்குகிறது.

ஊழல் மதிப்பாய்வுச் சுட்டியில் பொதுத்துறை ஊழல் வகைகளாக இலஞ் சம், பொது நிதியின் தவறான பயன்பாடு, ஊழல் தொடர்பி லான வழக்குகளை திறம்பட விசாரணை செய்யும் தன்மை, போதுமான சட்ட கட்டமைப் புக்கள், தகவல் அணுகுவதற்கான வாய்ப்பு மற்றும் முறை கேடுகளை வெளிப்படுத்துவோர், ஊடகவியலாளர்கள் மற்றும் புலனாய்வாளர்களுக்கான சட்டப் பாதுகாப்புகளின் தன்மை என்பனவே உள்ளடக்கியுள்ளது.

இலங்கையின் ஊழலுக் கெதிரான ஒட்டுமொத்த செயற்பாடுகளும் ஸ்தம்பித நிலையிலேயே காணப்படுவதாகவும் கடந்த 10 ஆண்டுகளில் 86 சதவீதமான உலக நாடுகளில் ஊழலுக்கெதிராக எந்த முன்னேற்றமும் அடையப்படாத நிலைமையே காணப்படுவதாக ட்ரான்ஸ்பரன்சி இன்டர்நஷனல் நிறுவனம் குறிப்பிடுகிறது.

சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தல் மற்றும் பொறுப்புக்கூறல் செயற்பாட்டிலிருந்து விலகுதல் போன்ற அடிப்படை விடயங்களிலிருந்து விடுபட உலகளாவிய கோவிட்-19 தொற்றுப்பரவலை உலகிலுள்ள பல நாடுகள் தமக்கு சாதகமாக பயன்படுத்துகிறது என ட்ரான்ஸ்பரன்சி இன்டர்நஷனல் நிறுவனம் குறிப்பிடுகிறது. (அ)




## 14 இலட்சம் ரூபா பெறுமதியான சட்டவிரோத சிகரெட்டுகள் மீட்பு

கொழும்பு, ஜன. 27

வத்தளை, ஹெந்தலை பிரதேசத்தில் விற்பனை நிலையமொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 14 இலட்சம் ரூபா பெறுமதியான சட்டவிரோத சிகரெட்டுகள் கைபற்றப்பட்டுள்ளதாக விசேட அதிரடிப்படை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதன்போது 23 ஆயிரம் சட்டவிரோத சிகரெட்டுகள் இருந்ததாக விசேட அதிரடிப்படை அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த சிகரெட் தொகை தீர்வை வரியின்றி நாட்டுக்கு சட்டவிரோதமாக கொண்வரப்பட்ட சிகரெட்டுகள் என விசேட அதிரடிப்படை அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

இந்த சட்டவிரோத சிகரெட்டுகளுடன் கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் மேலதிக விசாரணைகளுக்காக வத்தளை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (அ)

## கமநல காப்புறுதி சபையின் தலைவர் பதவி விலகினார்

கொழும்பு, ஜன. 27

விவசாய மற்றும் விவசாய காப்புறுதிச் சபையின் தலைவர் பதவியில் இருந்து சட்டத்தரணி பிரேமச்சந்திர ஏப்பா விலகியுள்ளார்.

நேற்று முன்தினம் அவர் தமது பதவி விலகல் கடிதத்தை விவசாய அமைச்சர் மஹிந்தானந்தவுக்கு அனுப்பி வைத்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த சில நாட்களாக விவசாய காப்புறுதிச் சபையின் சேவையாளர்கள் அவருக்கு எதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இதனையடுத்து, குறித்த பதவியில் இருந்து அவர் விலகியுள்ளார் என தெரிவிக்கப்படுகிறது. (அ)



## ஆயுள்வேத வைத்தியசாலை நாவாந்துறையில் திறப்பு!

யாழ்ப்பாணம், ஜன. 27

நாவாந்துறை பகுதியில் உள்ள ஆயுள்வேத வைத்தியசாலையை யாழ்.மாநகர முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் நேற்று புதன்கிழமை திறந்து வைத்தார்.

யாழ்.மாநகர சபை உறுப்பினர் நீ.பிலிப்பின் வட்டார நிதி ஒதுக்கீட்டில் , இந்த ஆயுள்வேத வைத்தியசாலை புனரமைக்கப்பட்ட நிலையில் மாநகர ஆணையாளர் இ.த. ஜெயசீலன் தலைமையில் திறப்பு விழா இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் நாவாந்துறை பங்குத்தந்தை அருட்பணி ம. ஜேசுரட்ணம், யாழ்.மாநகர சபை உறுப்பினர்கள் மற்றும் மாநகர பிரதி ஆணையாளர், செயலாளர் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். (அ)

# மேலும் 1.5 பில்லியன் டொலர்கள் இந்தியாவிடம் கோரும் இலங்கை

## அந்நாட்டு ஊடகங்கள் தகவல்

**கொழும்பு, ஜன. 25**

**நாட்டில் நிலவும் பிரச்னைகளுக்கு அரசாங்கத்தின் தவறான பொருளாதார கொள்கைகளே பிரதான காரணம் என பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க குற்றம் சுமத்தியுள்ளார்.**

கொழும்பு, ஜன. 27

இலங்கை, இந்தியாவிடம் மேலும் 1.5 பில்லியன் அமெரிக்க டொலர்களை கடனாக கேட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரீஸை வெளியிட்டுள்ள கருத்தை மேற்கோள் காட்டி இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ள.

அந்த செய்தியில் தொடர்ந்தும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

“இலங்கையில் அன்னிய செலாவணி கையிருப்பு வேகமாக தீர்ந்து வருவதால் கடும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டு உள்ளது.

பணவீக்கம் அதிகரித்து விலைவாசி உச்சத்தில் இருக்கிறது.

எரிபொருள் வாங்க பணம் இல்லாததால் மின் நிலையங்கள் உற்பத்தியின்றி முடங்கியுள்ளன. இதனால் நாடு முழுவதும் மின்வெட்டு அமல்படுத்தப்படுகிறது.

இவ்வாறு தொடர்ந்து சிக்கலை அனுபவித்து வரும் இலங்கைக்கு இந்தியா உதவிக் கரம் நீட்டி வருகிறது. அந்த வகையில் உணவு மற்றும் அத்தியாவசிய பொருட்களுக்காக ஏற்கனவே ஒரு பில்லியன் டொலர் நிதியுதவி வழங்கப்பட்டது.

மேலும் இந்தியாவிடம் இருந்து எரிபொருள் இறக்குமதிக்காக 500 மில்லியன் டொலர் கூடுதலாக அளிக்கப்பட்டது.

இதைத்தவிர இலங்கையின் மொத்த கையிருப்பை மேம்படுத்துவதற்காக 400 மில்லி யன் அமெரிக்க டொலர் நாணய மாற்று வசதியை இந்தியா அறிவித்தது. அத்துடன் 515 மில்லியன் டொலர் ஆசிய நாணய யூனியன் தீர்வையையும் ஒத்தி வைத்தது. இந்த உதவிகளால் இலங்கையின் அன்னிய செலாவணி கையிருப்பு கரைவது கட்டுப்படுத்தப்பட்டு உள்ளதாக இலங்கையின் பொருளாதார வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில் இந்தியாவிடம் மேலும் 1.5 பில்லியன் டொலர் நிதியுதவி கேட்டிருப்பதாகவும், இது கிடைக்கும் என நம்புவதாகவும் வெளியுறவு அமைச்சர் ஜி.எல்.பீரீஸ் தெரிவித்தார்.

இது தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய அவர்,

“டில்லியில் இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் மற்றும் வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கருடன், இலங்கை நிதி அமைச்சர் பசில் ராஜபக்ச நடத்திய பேச்சுவார்த்தையின் விளைவாக நாம் ஒரு உதவியை பெற முடிந்தது.

அதைப்போல மேலும் 1.5 பில்லியன் டொலர் நிதியுதவி பெறுவதற்கான வாய்ப்பு உள்ளது’ என்று தெரிவித்தார்.

இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கு உதவுவதற்காக சர்வதேச நிதியத்தை அணுகும் வாய்ப்பும் இருப்பதாக கூறிய பீரீஸ், அந்த நிதியத்தின் உறுப்பினராக நாம் இருப்பதால், அதற்கான கதவுகளும் திறந்தே இருக்கின்றன என்றும் கூறினார்.

இலங்கையில அந்நிய செலாவணி நெருக்கடி ஏற்பட்டுள்ள போதிலும், முற்றிலுமாக அது தீர்ந்து விடவில்லை எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (அ)

# நகர்ப்புற குடிசைவாசிகளில் 23,000 பேருக்கு வீடு வழங்கல்

கொழும்பு, ஜன. 27

நாட்டிலுள்ள அனைத்து நகர்ப்புற குடிசைவாசிகளுக்கும் வீடுகளை வழங்கும் வேலைத்திட்டம் 2024 ஆம் ஆண்டில் நிறைவடையும் என நகர அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

நாட்டிலுள்ள 40,000 நகர்ப்புற குடிசைவாசிகளில் 23,000 பேருக்கு தற்போது வீடுகள் வழங்கப்பட்டுள்ளதாக நகர அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் பிரசாத் ரணவீர தெரிவித்தார்.

ஏனையோருக்கான வீடுகளை நிர்மாணிக்கும் பணிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# தனியாரிடமுள்ள மின்பிறப்பாக்கிகளை தேசிய கட்டமைப்புடன் சேர்க்கத் திட்டம்

கொழும்பு, ஜன. 27

அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு சொந்தமான மின்பிறப்பாக்கிகளை தேசிய கட்டமைப்புடன் இணைப்பதற்கான கலந்துரையாடல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொது பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

சுமார் 2,000 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்யக்கூடிய மின்பிறப்பாக்கிகள் குறித்த நிறுவனங்களிடம் உள்ளதாக இலங்கை பொது பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க குறிப்பிட்டார்.

கொழும்பு நகரிலுள்ள 10 இடங்களில் மாத்திரம் 60 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்யக்கூடிய மின் உற்பத்தி இயந்திரங்கள் உள்ளதாக அவர் கூறினார்.

தற்போது நிலவும் மின்சார நெருக்கடி, வழமைக்கு திரும்பும்வரை குறித்த மின்பிறப்பாக்கிகளை பயன்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதாக ஜனக ரத்நாயக்க தெரிவித்தார். (அ)



# யாழ். இந்திய துணைத் தூதரகத்தில் இந்தியாவின் குடியரசு தின நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜன. 27

யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணைத்தூதரகத்தில் இந்தியாவின் 73ஆவது குடியரசு தின நிகழ்வு நேற்று சிறப்பாக இடம்பெற்றது.

யாழ். இந்திய துணைத்தூதரகத்தின் பதில் துணைதூதுவர் ராம் மகேஸினால் இந்திய தேசியக்கொடி ஏற்றப்பட்டு தேசிய கீதம் இசைக்கப்பட்டு இந்திய குடியரசுத் தலைவரின் சிறப்புரையும் பதில் துணைத்தூதுவரால் வாசிக்கப்பட்டது.

அதன்பின்னர் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றதுடன் சுகாதார நடைமுறை பின்பற்றி இடம்பெற்ற குடியரசு தின நிகழ்வில் மட்டுப்படுத்தப்பட்டளவில் விருந்தினர்கள் கலந்துகொண்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-03)

# இலங்கைக்கு எதிராக சீன நிறுவனம் ஐ.நாவின் அமைப்பிடம் முறைப்பாடு!

கொழும்பு, ஜன. 27

சேதனப்பசளைகள் தொடர்பாக இலங்கையுடன் முரண்பட்ட சீன நிறுவனம், முறைப்படி ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் விவசாய அமைப்பிடம் முறைப்பாடு செய்துள்ளது.

குயிங்டா சீவின் பயோலொயிக்கல் குறூப் லிமிட்டெட் நிறுவனம், கொழும்பின் ஊடகம் ஒன்றுக்கு அனுப்பிய மின்னஞ்சலில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே இலங்கைக்கும் சீன நிறுவனத்துக்கும் இடையில் உடன்பாடு எட்டப்படுவதற்கு முன்னர், இந்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த முறைப்பாட்டில், ஐக்கிய நாடுகளின் உணவு அமைப்பு, தலையிட்டு, இலங்கையிடம் இருந்து இழப்புக்களை பெற்றுக்கொடுக்கவேண்டும் என்றும், தமது நிறுவனம் தொடர்பான புரிதலை அகற்றவேண்டும் என்றும் சீன நிறுவனம் கோரியுள்ளது.

இலங்கை ஜனாதிபதியின் பசுமை விவசாய உற்பத்தித் திட்டம் தொடர்பில் இலங்கையின் சில பல்கலைக்கழக பேராசிரியர்கள் பொறுப்பற்ற வகையில் நடந்துக்கொள்கிறார்கள் என்றும், அவர்கள் சர்வதேச அங்கீகாரம் பெற்ற நிறுவனங்களின் சோதனை அறிக்கைகளை கேள்விக்கு உட்படுத்துவதாகவும் முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சீனாவின் சீவின் நிறுவனம், இலங்கைக்கு எடுத்து வந்த சேதனப் பசளைகளில் பயிர்களுக்கு தாக்கம் செலுத்தக்கூடிய பக்றீரியா இருப்பதாக கூறி, இலங்கை அதனை ஏற்க மறுத்தது.

எனினும் அதற்கு முன்னதாக வங்கி நாணயக்கடிதத்தை இலங்கை திறந்தமை காரணமாக, கப்பலில் கொண்டு வரப்பட்ட சேதன பசளைகளுக்கான கொடுப்பனவை இலங்கை செலுத்த நேரிட்டது.

இதனையடுத்து மீண்டும் சீனாவுக்கு குறித்த பசளையை எடுத்துச்சென்று தொற்று நீக்கி மீண்டும் இலங்கைக்கு கொண்டு வர சீன நிறுவனம் இணங்கியுள்ளது.

இந்தநிலையில் குறித்த இணக்கங்கள் ஏற்படுவதற்கு முன்னரே சீன நிறுவனம், ஐக்கிய நாடுகளில் நிறுவனத்தில் முறையிட்டுள்ளது. (அ)

# புத்தளத்தில் உயிரிழந்த நிலையில் கரையொதுங்கும் கடல் ஆமைகள்



கொழும்பு, ஜன. 27

புத்தளம் மாவட்டத்தின் முந்தல் பிரதேச செயலகத்துக்குட்பட்ட உடப்பு, முகத்துவாரம் கடற்கரையோரத்தில் இறந்த நிலையில் கடல் ஆமையொன்று நேற்று முன் தினம் கரையொதுங்கியுள்ளது.

குறித்த கடற்பிரதேசத்தில் இவ்வாறு இறந்த நிலையில் கடல் ஆமையொன்று கரையொதுங்கியுள்ளதை அவதானித்த மீனவர்கள் அதுபற்றி, ஆனைவிழுந்தான் வனவிலங்கு அலுவலக அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தியுள்ளனர்.

இவ்வாறு கரையொதுங்கிய கடல் ஆமை 25-30 கிலோ கிராம் நிறையுள்ளது என மீனவர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை, முந்தல் பிரதேச செயலகத்துக்குட்பட்ட பூனைப்பிட்டி பிரதேச கடற்கரையோரத்தில் இறந்த நிலையில் கடல் ஆமையொன்று கடந்த 23ஆம் திகதி காலை கரையொதுங்கியது.

கடந்த சில மாதங்களில் மட்டும் புத்தளம் மாவட்டத்தில் பல கடல் ஆமைகளும், பல டொல்பின்களும், சுறா மீன்களும் இறந்த நிலையில் கரையொதுங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. விலங்குகள் மற்றும் தாவர பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் கீழ், சகல கடல்வாழ் ஆமைகள், அதனது குஞ்சுகள் மற்றும் முட்டைகள் என்பன இலங்கையில் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. (அ)



# இளையோரின் ஏற்றத்திற்கான எமது முயற்சியை கொச்சைப்படுத்தாதீர்கள்!

**கம்பவாரிதி இ. ஜெயராஜ்**

உயர் ஆளுமை பெற்று நம் இளையோர் உயர்வு பெற வேண்டும் எனும் நோக்கோடு அண்மையில் கிளிநொச்சியில் நாம் ஆரம்பித்த புதிய முயற்சிக்கு எதிர்ப்புத் தெரிவித்து யாழ். பல்கலைக்கழக இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் நடாத்திய பத்திரிகையாளர் மாநாட்டினை இணையவெளியில் பார்க்கமுடிந்தது. அது பற்றி எமது கருத்தினை மக்களரங்கில் பகிர்ந்து கொள்ளவேண்டியதன் அவசியத்தை உணர்ந்து இக்கட்டுரையை வரைகிறேன்.

அங்கு பேசிய மாணவர், நாங்கள் மாணவர்களுக்கு இராணுவ முகாம்களில் பயிற்சி அளிக்கப்போவதாகவும், அது நம் மாணவர்களின் சுயாதீனத்தை கெடுத்து தேவையற்ற அழுத்தங்களை உண்டாக்கிவிடப் போகிறது எனவும் விசனப்பட்டிருந்தார். அண்மையில் நடந்த அடிக்கல் நாட்டு விழாவில், நான் நிகழ்த்திய உரையின் ஒரு சிறு பகுதியை மட்டும் பிரமாண்டமாகப் 'போகஸ்' செய்தும், மற்றைய என் கருத்துக்களை முற்றாக 'எடிட்' செய்தும் மிகவும் புத்திசாலித்தனமாக எமது முயற்சியை சமூகத்தின் முன் பிழையாகப் பதிவு செய்ய அவர் முயன்றார்.

அவருடைய அந்தக் கீழ்மையான முயற்சியைக் கண்டு மனவருத்தமுறுகிறோம். இது ஒட்டுமொத்த மாணவர்களின் கருத்து அன்று என்பதையும் இம் மாணவர் யாருடையதோ தூண்டுதலால் தான் அவசர அவசரமாக இக்காரியத்தைச் செய்ய முனைந்தார் என்பதையும் நன்கு உணர்கிறோம்.

நம் இனத்தின் அடுத்த தலைமுறையை வழிநடத்தப்போகிற கற்ற இளையோரேனும் நிமிர்வோடும் நிதானத்தோடும் தமது சொந்த புத்தியால் நடந்து கொள்ள வேண்டும் என கேட்டுக் கொள்கிறோம். அன்றைய மாணவரின் உரையில் உண்மையை அறிந்து வெளிப்படுத்தும் நோக்கம் இருக்கவில்லை. சமூகத்தை, எமக்கு எதிராகத் தூண்டும் முயற்சி மட்டுமே இருந்தது. அது இளையோர் மீது நம்பிக்கை கொண்ட எமக்கு பெரும் ஏமாற்றத்தைத் தந்தது.

அந்தப் பத்திரிகை மாநாட்டை நடத்துவதற்கு முதல், அம் மாணவ நண்பர் எங்களோடு தொடர்பு கொண்டு, நாம் என்ன செய்ய நினைத்திருக்கிறோம் என்பதைக் கேட்டு அறிந்திருக்கவேண்டும். அதனைச் செய்யாமல் வெறும் ஊகத்தின் அடிப்படையில் ஒரு செய்தியை உருவாக்கிக் கொண்டு, நாம் செய்ய நினைக்கும் நற்காரியத்தை ஏதோ 'இனத்துரோகம்' செய்வதுபோல் வர்ணித்து பேசியிருந்தார்.

'மூட்டைப்பூச்சிக்கு துப்பாக்கி எடுத்த கதை'யாய் அவசரப்பட்டு நண்பர் நடாத்திய பத்திரிகை மாநாடு வேடிக்கைக்குரிய ஒன்றாய் அமைந்தது. தமக்குச் சார்பாய், கிடைத்த ஒரு புள்ளியை வைத்து அவசர அவசரமாக கோலம் போட்டுவிடவேண்டும் என்று நினைக்கும் சில கீழ்த்தரமான அரசியல்வாதிகளின் வேகமே அவரது செயலில் வெளிப்பட்டது.

கம்பன் கழகம், கடந்த நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக எங்களுடைய தமிழ்ச் சமூகத்துடன் இணைந்தே பயணித்திருக்கிறது. எமது கழகத்தின் முயற்சிகளின் தூய்மையை நமது தமிழ்ச் சமூகம் நன்கு அறியும். இன்றுவரை எமது கழகம் செய்யும் முயற்சிகளின் வெற்றிக்கு நம் சமூகம் தரும் ஆதரவும், அன்புமே காரணமாயின. இன்று எமது கழகத்தின் சாதனையாய்ச் சொல்லப்படும் விடயங்கள் அனைத்தும் எம்மக்கள் தந்த ஆதரவால் நிகழ்ந்தவையே. அந்த நன்றியை நானும் எமது கழகமும் என்றும் மறக்கப்போவது இல்லை.

முன்னைய கூட்டணித் தலைவர்கள், அதன்பின் வந்த போராளித் தலைவர்கள் தற்போதைய நம் அரசியல்த் தலைவர்கள் என அனைவருமே, இதுவரை எம் கழகத்தைக் கண்ணியப்படுத்தியே வந்திருக்கிறார்கள். அன்று நாம் நடாத்திய அடிக்கல் நாட்டுவிழாவில், முரண்பாடுடைய அனைத்துத் தலைவர்களும் கட்சி பேதமின்றி ஒன்றிணைந்து வந்ததே மேல் உண்மைக்கான தக்க சாட்சியாம்.

போராட்ட காலத்தில் பலவாகப் பிரிந்திருந்த போராளிக் குழுக்கள் அனைத்துமே கூட, எங்கள் மீதான மதிப் பினைப் போற்றியே வந்தன. எங்களை வீழ்த்தவேண்டும் என நினைத்த சிலர், புலிகளுக்கும் எங்களுக்கும் பெரிய பிரச்னைகள் உண்டானதாய், கற்பனைக் கதைகள் பலவற்றைக் கட்டி மகிழ்ந்தார்கள். இன்றும் மகிழ்கிறார்கள். ஆனால் அதை வைத்து எம்மை வீழ்த்த நினைத்த அவர்களின் முயற்சி கைகூடவில்லை.

நாம் புலிகளோடு சில முரண்பாடுகளைக் கொண்டிருந்தது பகிரங்கமான விடயம். அம் முரண்பாடுகள் எங்களின் கொள்கை சார்ந்தவை மட்டுமே. சில விட்டுக் கொடுப்புக்களை நாம் செய்யாததால் அவர்கள் எம்மேல் அதிருப்தியுற்றிருந்தார்கள். அவ்வளவே! ஆனால் அவர்கள் கடைசிவரை எம்மைக் கௌரவத்தோடுதான் நடத்தினார்கள்.

அக்காலத்தில் இருந்த புலிகளின் அதிகாரத்தோடு ஒப்பிடும்போது, நாங்கள் புள்ளியளவானவர்களாய்க்கூட இருக்கவில்லை. அவர்கள் நினைத்திருந்தால், இவர்களைப் போல ஏதாவது இல்லாத பழிகளைச் சொல்லி எங்களைத் துடைத்தெறிந்திருக்க முடியும். அவர்கள் அப்படிச் செய்யாததே எம்மேல் அவர்கள் கொண்ட மதிப்புக்கான சாட்சியாய் இருந்தது.

புலி உறுப்பினர் சிலருடன் ஏற்பட்ட ஒரு சில கருத்து முரண்பாடுகளால் 'இனி இந்த மண்ணில் பேசமாட்டோம்' என நாம் பகிரங்கமாய் அறிவித்த போது, அதனை தங்கள் இயக்கத்திற்கு நாம் விடுத்த சவாலாய்க் கொள்ளாமல், ஒன்றுக்கு மூன்று தரமாய் தமது புலனாய்வு உறுப்பினர்களை அனுப்பி எம்மை மீண்டும் பேசவேண்டும் என அவர்கள் திரும்பத் திரும்ப வேண்டிக் கொண்டனர்.

ஆனால் நாமோ, 'எமக்கு நேர்மையான தீர்வு கிடைக்கும் வரையும் பேசப் போவதில்லை' என பிடிவாதம் பிடிக்க, யாழ். மண்ணுக்குள் இராணுவம் புகத் தொடங்கியிருந்த அந்த இக்கட்டான வேளையில்கூட, நேரம் ஒதுக்கி புலிகளின் புலனாய்வுத்துறைத் தலைவர் பொட்டம்மான் என்னை நேரில் சந்தித்து நடந்த பிரச்னைகள் பற்றிக் கேட்டறிந்தார்.

புலிகளுக்கும் எங்களுக்கும் கடும் முரண் இருந்ததாகப் பேசப்பட்ட கால கட்டத்தில்கூட, திலீபனின் நினைவுக்கூட்டத்தின் இறுதிநாளன்று, எங்கள் கழகத்தாரை அழைத்தே அவர்கள் பட்டிமண்டபம் நடத்தினார்கள். நல்லூர் வீதியில், பெரும் சனத்திரளுக்குக்கிடையில் நடந்த அக்கூட்டத்தில், புலிகளின் ஆதரவாளர்களின் சில செயல்களை நான் கடுமையாகக் கண்டித்துப் பேசினேன். அப்போது என் கருத்துப் பற்றி யாழ்ப்பாணம் முழுவதும் பரவலாகப் பேசப்பட்டது. ஆனால் அப்பேச்சில் நான் சொன்ன விடயங்களை அவர்களது தலைமை ஏற்றுக் கொண்டமையை அடுத்த திலீபனின் விழாவில் காணமுடிந்தது.

இடம்பெயர்ந்து நாங்கள் இருந்த போது, கொழும்பு செல்ல ஒருவருக்கும் 'பாஸ்' வழங்காத அன்றைய நிலையில் எனக்கும் கழக நண்பர்களுக்கும் பாஸ் தந்து அவர்கள் மதிப்பளித்தார்கள். அது மட்டுமல்லாமல், புலிகளின் கடைசி 'சென்ரி'யைத் தாண்டி வவுனியாவுக்குள் செல்ல நாம் முயன்றபோது, ஒரு புலி நண்பன் என்னை தனியே அழைத்து 'இந்த நேரத்தில் நீங்கள் கொழும்பு செல்வது புத்திசாலித்தனம் இல்லை' என்று எம் நன்மை நோக்கித் தடுத்தான். பின்னர் எம் தேவையை நான் உணர்த்த, அதை ஏற்றுக்கொண்டு எங்களைப் போக அனுமதித்தான்.

தற்போது இவர்கள் உண்டாக்கியிருக்கும் பிரச்சினையில் இருந்து தப்பித்துக் கொள்வதற்கான முயற்சியாய் இவர், தமக்கு 'புலிச்சாயம்' பூச முயல்கிறார் என சிலர் உரைக்கலாம். அப்படிச் செய்ய நான் ஓர் அரசியல்வாதி அல்ல. இவை பற்றியெல்லாம் எனது 'உன்னைச் சரணடைந்தேன்' எனும் நூலில் எப்போதோ நான் தெளிவாக எழுதியிருக்கிறேன். இப்போது இவற்றை நினைவூட்டுவதன் காரணம் எங்கள் மீது பழிதூற்ற, எங்களோடு சில விடயங்களில் முரண்பட்டிருந்த புலிகள்கூட முன்வரவில்லை என்பதை உணர்த்தவேயாம்.

இப்படியாய், அரைநூற்றாண்டை அண்மிக்கும் எமது பொது வாழ்வின் உயர்ந்த நோக்கத்தை, வரலாறு அறியாமல் குறித்த அந்த நண்பர் சிதைக்க முற்பட்டிருக்கிறார்.

இன்றுவரை எமது கழகத்தின் முயற்சிகளை நம் தமிழினத்தின் உயர்வு நோக்கியே நாம் நகர்த்தி வந்திருக்கிறோம். நமது சமூக உயர்வுக்காய் செய்யப்படும் நல்ல விடயங்களை பகிரங்கமாய் பாராட்டவும், இனத்தின் வீழ்ச்சிக்காய் செய்யப்படும் தீய விடயங்களை எவருக்கும் அஞ்சாமல் கண்டிக்கவும் நாம் என்றும் தவறியதில்லை. இது உலகறிந்த உண்மை.

வரலாறு இப்படியிருக்க, எமது கம்பன் கழகம் இளையோரை இராணுவத்தின் வயப்படுத்த முயல்வதாய் அந்நண்பர் பேசியிருப்பது சமூகத்தோடு தொடர்பில்லாத அவரது நிலையையே வெளிப்படுத்துகிறது. போராட்டங்களின் மூலம் தன் இருப்பை நிலைநிறுத்த அந்நண்பர் விரும்பினால், அதற்கு நம் சமூகத்தில் வேறு எத்தனையோ காரணங்கள் இருக்கின்றன. அவற்றை விடுத்து, தேவையற்று எமது நன்முயற்சியை தாழ்த்த நினைப்பது அவரது அறியாமையின் வெளிப்பாடேயாம்.

இத்தருணத்தில், நம் இளையோர்க்கு நாம் எடுக்கத் தொடங்கியிருக்கும் முயற்சி பற்றி விளக்கம் அளிப்பது எமது கடமை என நினைக்கிறோம்.

மூன்று தசாப்தங்களாக போரின் இன்னல்களுக்கு இடையில் வளர்ந்த எமது இளைய தலைமுறை, அதனால் பல பாதிப்புகளுக்கு ஆளாகி இருக்கிறது. அப்பாதிப்புகளில் முக்கியமானதாய் நாம் கருதுவது 'ஆளுமை' இழப்பினையேயாம்.

இத்தனைப் பெரிய இன்னல் பாதையைக் கடந்து வந்த பின்னும்கூட நம் இளையோர், தம் அறிவாற்றலில் யாருக்கும் 'சோடை' போகவில்லை. ஆனால், நிகழ்ந்த ஆளுமை இழப்பு என்பது அவர்கள் அடைந்திருக்க வேண்டிய உயர் நிலைகளை அடையமுடியாமல் ஆக்கியிருக்கிறது.

(09 ஆம் பக்கம் பார்க்க...)

# அரச அலுவலரின் இரண்டாம் மொழி அறிவு கைவிடப்படுகின்றது

த.மனோகரன்

தமிழையும் தேசிய மொழியாக அங்கீகரித்திருந்தால் இனப் பிரச்னை ஏற்பட்டிருக்காது என்ற சாரப்படி கல்முனையில் இடம்பெற்ற ஒரு நிகழ்வின் போது அமைச்சர் டலஸ் அலகப்பெரும குறிப்பிட்டிருந்தார்.

ஒரு பொறுப்புவாய்ந்த இனவாத சிந்தனை யற்றவராகக் கருதப்படும் மேற்படி அமைச்சர் அரசியலமைப்பின் 13ஆவது திருத்தங்களின்படி தமிழ்மொழிக்கு இந்நாட்டில் தேசிய மொழி மற்றும் அரசகரும மொழியுரிமை வழங்கப்பட்டுள்ளமையை தெரிந்துகொள் ளாதிருப்பது வேதனைத் தருகின்றது.

அவர் மட்டுமல்ல எந்தவொரு தமிழ் அரசியல்வாதி கூட தமிழ் மொழி பெற்றுள்ள உரிமைகள் எவையென்பதைச் சரியாகப் புரிந்து கொள்ளாது உள்ளனர் என்பது மறுக்கவோ, மறைக்கவோ முடியாத உண்மை.

1987 மற்றும் 1988ஆம் ஆண்டுகளில் உருவாக்கப்பட்ட திருத்தங்களைத் தெளிவுப்படுத்திக்கொள்ள இந்நாட்டின் தமிழ் அரசியல்வாதிகள் உள்ளிட்ட அரசியல்வாதிகள் எவரும் முனையாதுள்ளனர். வாசுதேவ நாணயக்கார மொழிகள் தொடர்பான அமைச்சராக செயற்பட்ட காலத்தின் பின் அரசகரும மொழியாகத் தமிழ் மொழியைச் செயற்படுத்த எவரும் முயற்சிக்கவில்லையென்பது ஆதாரபூர்வமாக நிரூபணமாயுள்ளது.

2015 ஆம் ஆண்டு அதாவது நல்லாட்சி அரசாங்கம் அமைவதற்கு முற்பட்ட காலத்தில் தமிழ்மொழியையும் அரசகரும மொழியாக நடைமுறைப்படுத்துவதற்கு பதினெட்டிற்கும் மேற்பட்ட சுற்றுநிருபங்கள், அறிவுறுத்தல்கள், விசேட, அதிவிசேட வர்த்தமாணிகள் என்று பல வெளியிடப்பட்டன. ஆனால் அந்த முயற்சிகள் அனைத்தும் 2015ஆம் ஆண்டின் பின்னர் முற்றாகக் கைவிடப்படாமை ஆய்வின் மூலம் தெளிவாக தெரிய வருகின்றது.

அரச அலுவலர்கள் இரண்டாம் மொழியாக சிங்களத்தையோ, தமிழையோ கற்பது கட்டாயம் என்பதுடன் குறித்த இரண்டாம் மொழியில் எழுத, பேச, வாசிக்க, விளங்கிக்கொள்ள கூடியதாக இருக்க வேண்டுமென்றும், அதற்காக அவர்கள் எழுத்து மற்றும் பேச்சு பரீட்சைகளுக்குத் தோற்றிச் சித்தியடைய வேண்டுமென்ற விதி 2015ஆம் ஆண்டு வரை கட்டாயமாக கடைப்பிடிக்க வேண்டுமென்று இருந்தது.

அது மைத்திரிபால சிரிசேன தலைமையிலான அரசாங்கத்தின் காலத்தில் கைவிடப்பட்டு அரச அலுவலர்கள் படிமுறையில் 50,100,200 மணித்தியாலங்கள் இரண்டாம் மொழி வகுப்புகளுக்குச் சமூகமளித்து வருகையை உறுதிப்படுத்த ஒப்பமிட்டிருந்தால் போதுமானது என்று கூறப்பட்டது. அதுவே இன்றும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. மொழித் தகைமையை அறிந்து கொள்ள எந்தவொரு பரீட்சையும் தேவையில்லையென்ற நிலை நல்லாட்சிக் காலத்தில் உறுதிப்படுத்தப்பட்டது.

சரியான முறையில் புரிந்துகொண்டால் தமிழ் மொழியை அரச அலுவலகங்களில் செயற்படுத்த வேண்டுமென்ற விதி, நோக்கம் கைவிடப்பட்டுள்ளது என்பது தெளிவாக விளங்குகின்றது.

2015ஆம் ஆண்டுகளுக்கு முன் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு வெளியேயுள்ள 41 பிரதேச செயலகப் பிரிவுகள் தமிழுக்கும் நிர்வாக உரிமையுள்ள இருமொழிப் பிரதேச செயலகப் பிரிவுகளாக பிரகடனப்படுத்தப்பட்டன. மேலும் 31 பிரதேச செயலகப் பிரிவுகள் தமிழ் மொழிக்கும் நிர்வாக உரிமையுள்ள பிரதேச செயலகப் பிரிவுகளாக இனங்காணப்பட்டிருந்தன. வத்தளை, கொலன்னாவை, நீர்கொழும்பு போன்றவை தமிழரும் கணிசமான அளவு வாழும் பிரதேச பிரிவுகள் ஆகும். நல்லாட்சிக் காலத்திலோ அதன் பின்னரான இன்றோ அன்று வாசுதேவ நாணயக்கார அமைச்சராகவிருந்த போது இனங்காணப்பட்ட தமிழுக்கும் நிர்வாக உரிமையுள்ள பிரதேச செயலகப் பிரிவுகள் இருமொழிப் பிரதேச செயலகப் பிரிவுகளாகப் பிரகடனப்படுத்தப்படவில்லை. பலமுறை சுட்டிக்காட்டியும் அது செவிடன் காதில் ஊதிய சங்கு போல் ஆனது தான் மிச்சம்.

தற்போதைய அரசியலமைப்பில் உள்ள மொழியுரிமையை உறுதிப்படுத்த ஏற்ற வழி முறைகள் காணப்பட வேண்டும். சகல அரசியல்வாதிகளுக்கும், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் தமிழர் உட்பட அரசியலமைப்பில் தேசிய மற்றும் அரசகரும மொழிகள் தொடர்பாக அறிவூட்டப்பட வேண்டும். அது காலத்தின் தேவையாகும். பூனைக்கு மணி கட்டுவது யார்? ■

---

# இளையோரின்....

[08 ஆம் பக்கத் தொடர்ச்சி...]

இதுபற்றி நானும் எனது கழக நண்பர்களும் பல காலமாக சிந்தித்து வருகிறோம். அதிகூடிய பரீட்சை சித்தி பெற்ற மாணவனும் கூட, நம் மண்ணைத் தாண்டி தெற்கிற்குள் நுழைந்தால், அங் குள்ள மாணவர்களின் ஆளுமைக்கும், நிமிர்விற்கும் முன்னால் நின்று பிடிக்க முடியாமல் தளர்ந்து போகிறான். அதனால் அவன் கஷ்டப்பட்டு தேடிய தகுதிகளெல்லாம் 'விழலுக்கிறைத்த நீராய்'ப் ஆகிவிடுகின்றன.

நாம் கூடி ஆராய்ந்தபோது இதற்கான இரண்டு காரணங்களை இனங்கண்டோம். முதலாவது, இந்நாட்டில் பயிலப்படும் மொழிகளில், தமிழ்மொழி தவிர்ந்த மற்றைய மொழிகளில் நம் இளையோர்க்கு ஏற்பட்டிருக்கும் பயிற்சியின்மை. இரண்டாவது, உயர் ஆளுமையாளர்களை சந்திக்கக் கிடைக்காத வாய்ப்பிழப்பு.

நம் மண்ணில் ஆளுமையாளர்கள் இல்லையா? என உடன் கேட்பீர்கள். முற்றாய் இல்லை என நான் சொல்ல மாட்டேன். ஆனால் ஒருகாலத்தில் யாழ்ப்பாணத்திலிருந்த உயர் கல்வியாளர்கள், அதிகாரிகள், அரசியல் தலைவர்கள் என்பவர்களின் ஆளுமைத்திறனோடு ஒப்பிடும்போது இன்றைய நம் சமூகத்தின் ஆளுமைத்திறன், பூச்சியத்தை அண்மித்ததாகவே இருக்கிறது. அதனால், இன்று நம் இளையோர் பதவிகளையும் பட்டங்களையும் மட்டுமே ஆளுமையாய் நினைந்து, ஏமாந்து, உயர் ஆளுமைத் தரிசனம் இன்றிக் கிடக்கின்றார்கள்.

தெற்கில் வாழ்ந்த இளையோரோ, போர்க்காலத்திலும் தனிமைப்படாது உலகத் தொடர்பைப் பேணி வந்தார்கள். அதனால் அவர்களது மொழித்திறனும் ஆளுமைத்திறனும் மிகவும் விருத்தியாகி இருக்கிறது. அவர்கள் ஆளுமைத் திறனில் முப்பதாண்டு முன்னால் பயணிக்க, நம் பிள்ளைகள் பின்னால் பயணித்தார்கள். காலம் செய்த கொடுமை இது! இதனால் அவர்களுக்கும் நம் பிள்ளைகளுக்கும் இடையிலான ஆளுமை வேறுபாடு ஐம்பது ஆண்டுகளைக் கடந்து நிற்கிறது.

இந்த இடைவெளியை நிரப்பி நம்மவர்களின் ஆளுமையை வளர்ச்சி யுறச் செய்து, பழையபடி மற்றவர்கள் நம் பிள்ளைகளின்நிமிர்வு கண்டு, வியக்கும்நிலைக்கு நம் சமூகத்தையும் நிமிரச் செய்ய வேண்டும் என்பதற்காகவே எமது இந்தப் புதிய முயற்சியை நாம் தொடங்கியிருக்கிறோம்.

இன்று இத்தகைய ஆளுமைப் பயிற்சிக் களங்கள் பலராலும் பரவலாக நடத்தப்பட்டு வருகின்றன. ஆனால் அவற்றிலெல்லாம் வெறும் வகுப்பு எடுக்கும் முயற்சியே செய்யப்படுகிறது. அதனால் பெரும்பயன் கிடைக்காது என்பது எம் கருத்து. அதனாற்றான், மொழிப்பயிற்சியையும் ஆளுமைத் திறனையும் செயல் முறையூடாக நம் இளைஞர்கள் பெற வேண்டும் என நாம் நினைந்தோம்.

அதற்காக, இலங்கையின் பிற பகுதிகளிலும், வெளிநாடுகளிலும் வாழும் ஆற்றல்மிக்க மொழியியல் அறிஞர்கள், ஆளுமையாளர்கள் ஆகியோருடன் நம் இளையோர்க்கான சங்கமத்தை உண்டாக்க வேண்டும் என முடிவு செய்தோம். அச்சங்கமத்தால், இலங்கையளவில் தேவைப்படும் சிங்கள மொழிப் பயிற்சியையும், உலக அளவில் தேவைப்படும் ஆங்கில மொழிப்பயிற்சியையும் இயல்பாக உருவாக்கலாம் என்றும் உயர் ஆளுமையாளர்களின் சங்க மத்தால் நம் பிள்ளைகளின் ஆளுமையை வளர்ச்சியுறச் செய்யலாம் என்றும் நாம் கருதினோம்.

அதனால், இயல்பாகவே ஆளுமைத் திறன்கொண்ட இளையோர் சிலரை இனம் கண்டு, அவர்களை வேற்று மொழியாளர்களுடனும், ஆளுமையாளர்களுடனும் ஒன்றாகத் தங்க வைத்து, மொழித்திறன், ஆளுமைத்திறன் ஆகியவற்றை பயிலச் செய்ய வேண்டும் என்பது எங்களது முதற் திட்டமாய் இருக்கிறது. ஆங்கிலத்தை ஆங்கிலேய ஆசிரியர்களுடனும், சிங்களத்தை அம்மொழிசார்ந்த ஆசிரியர்களுடனும் நாள்முழுதும் உடன் இருந்து செயல்முறையால் அவர்களைப் பயிலச் செய்ய வேண்டும் என நினைத்திருக்கிறோம்.

மொழிப்பயிற்சியை ஏற்படுத்திய பின்பு, ஆளுமைமிக்கவர்களை சந்திக்கவும், அவர்களோடு உடன் இருக்கவும் செய்து, அவர்களின் ஆளுமைத்திறனை நம் இளையோர் உள்வாங்கும்படியாகச் செய்யவேண்டும் என்பது எமது அடுத்த திட்டமாய் இருக்கிறது. அதற்காக ஆளுமைமிக்க அரசியல் தலைவர்கள், நிறுவனத்தலைவர்கள், தொழிலதிபர்கள், வெளிநாட்டுத் தலைவர்கள் ஆகியோரைச் சந்திக்கச் செய்து, அவர்களோடு ஓரிரு தினங்கள் இவர்களைத் தங்க வைத்து, அதன்மூலம் நம் இளையோரின் ஆளுமைத்திறனை வளர்க்கத்தெடுக்க வேண்டும் என தீர்மானித்திருக்கிறோம்.

இங்குதான், அந்நண்பர் எழுப்பிய பிரச்சினை வருகிறது. நம் இளையோர்கள் ஆளுமைமிக்க இராணுவ உயரதிகாரிகளைச் சந்தித்து, அவர்களோடு நம் பிரச்னைகளைப் பற்றி சமநிலையில் நின்றுபேசி, தீர்வு காணும் துணிவைப் பெறுவதற்காகவும் இராணுவத்தின் இறுக்கமான கட்டுப்பாடுகளைத் தெரிந்து கொள்வதற்காகவும் அவர்களை இராணுவ முகாம்களுக்கும் அழைத்துச் செல்ல வேண்டும் என்று திட்டமிட்டிருக்கிறோம். யாழ்ப்பாணத்தின் புகழ்பெற்ற ஹாட்லி, சென். ஜோன்ஸ் கல்லூரிகளில் அதிபராய் இருந்த பூரணம்பிள்ளை அவர்களே, இம்முறையை எமக்கு முன்பு ஒருதரம் சொல்லியிருந்தார். அதுமட்டுமன்றி, நம் இளையோர்க்கு இத்தேசத்தில் வாழும் பிற மொழிச் சமூ கங்கள், பிற மதங்கள் என்பவற்றைப் பற்றியும் ஆழ்ந்த புரிந்துணர்வை உண்டாக வேண்டும் என்பதற்காக, அத்தகைய இடங்களில் நம் இளையோரை நேரடியாகத் தொடர்புபடுத்தி அனுபவம் பெறச் செய்யவேண்டும் என்பதும் எம் எண்ணமாய் இருக்கிறது.

ஒரு சிறு தேசத்திற்குள் வாழ்ந்தாலும், நம்மவர்க்கு அருகில் இருக்கும் மதங்கள் பற்றியோ, அம்மதத்தாரின் வழிபாட்டு முறைகள் பற்றியோ பெரும்பாலும் தெரிவதில்லை. அதுபோலவே அருகிருக்கும் வேற்று இன மக்களின் வாழ்க்கை முறை, உணவுமுறை, கலாசாரம், பண்பாடு என்பவை பற்றியும் நம்மவர்கள் தெரிந்திருப்பதில்லை. இவற்றையெல்லாம் தெரிந்து கொண்டால் நம் இளையோரிடம் பரந்த சிந்தனையும் மற்றைய சமூகங்களுடன் சமப்பட்டு இணைந்து வாழும் திறனும் தாமாக உண்டாகும். அதனால் நம் இளையோரின் ஆளுமை மிக வேகமாக வளரும். அது மட்டுமல்லாமல் நம் இனத்தினதும், மொழியினதும், மதத்தினதும் பெருமைகளையும் மற்றவர்க்கு உணர்த்துகிற வாய்ப்பும் அவர்களுக்குக் கிட்டும். அதனால்தான் இப்பயிற்சியில் ஈடுபடப்போகும் இளையோரை மற்றைய இன, மத, மொழி மாணவர்களுடன் கலாசாரப் பரிவர்த்தனம் செய்யவேண்டும் எனவும் திட்டமிட்டுள்ளோம்.

இவையெல்லாம் எமது கனவுகள்! ஒரு காலத்தில் இலங்கை முழுவதிலுமாக தமிழினத்தார் கொண்டிருந்த ஆளுமைமிக்கத் தலைமைத்தன்மையை மீட்டெடுக்கும் முயற்சியாகவே இத்திட்டங்களை நாம் வகுத்திருக்கிறோம். நடந்து முடிந்த போரையும் அதன் பாதிப்புக்களையும் சொல்லிச் சொல்லி, எவ்வளவு காலத்திற்குத்தான் எம் வாழ்க்கையை நாம் ஓட்டுவது? நிகழ்கால முயற்சியால், இறந்த காலப் பாதிப்புக்களை நீக்கி வருங்காலத்திலேனும், நம் கைவிட்டு நழுவிப் போன வீரியத்தை நாம் மீட்டெடுக்க வேண்டாமா? அதற்காகவே இலக்கிய முயற்சி எனும் எம் எல்லையைக் கடந்து இத்தகைய ஒரு பாரிய சமூகப்பணியை முன்னெடுக்கத் தொடங்கியிருக்கிறோம்.

எங்களின் இம்முயற்சிக்கு கைகொடுக்க முன்வராவிட்டாலும், அதனைக் கொச்சைப்படுத்த முனையாமலேனும் இருக்கவேண்டும் என அனைவரையும் வேண்டி நிற்கின்றோம். இப்போது நாம் தொடங்கியிருப்பது மேற்சொன்ன திட்டங்களுக்கான 'பிள்ளையார் சுழி' மட்டும்தான். அந் நன்முயற்சியை முளையிலேயே கருகச் செய்ய நினைக்கும் சில சுயநலவாதிகளின் கருத்துகளுக்கு ஆட்படாமல், நமது இளைய தலைமுறை எம்முடன் தோளோடு தோள் நின்று பாடுபட முன்வரவேண்டும் என்று வேண்டிக் கொள்கிறோம். ■

# புலமைச் சிகரம் | தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

20. வெற்றிடத்தை நிரப்புக.

i) 972, 324, 108, 36 ................................, ...............................................

ii) 7, 10, 14, 19 ................................, ...............................................

21. **VI, XI, XVII, XVI, XIX, III VIII, XV, XX**

கட்டத்தில் உள்ள இரட்டை எண்களை இந்து அராபிய எண்களில் எழுதுக.

..........................................................................................................................

22. ஒரு பழக்கடையில் 170 மாம்பழங்கள் இருந்தன. அவற்றில் 30 மாம்பழங்கள் பழுதடைந்துவிட்டன. ஏனையவற்றை ஏழு குவியல்களாகப் பிரித்து வைத்தான். அவற்றில் 3 குவியல்களில் உள்ள மாம்பழங்களை விற்று முடித்தான் எனின், விற்ற மாம்பழங்கள் எத்தனை?

..........................................................................................................................

23. ஒரு நீர்த்தாங்கியில் 28ℓ நீர் இருந்தது. அத்தாங்கியில் மேலும் 22ℓ நீர் சேர்க்கப்பட்டது. பின்னர் பயன்பாட்டுக்காக 17ℓ 375 mℓ எடுக்கப்பட்டது எனின், எஞ்சியிருந்த நீரின் கனவளவு யாது?

..........................................................................................................................

24.

| அளவு | பொருள் | ஒரு கிலோக்கிராமின் விலை | | பெறுமதி | |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | சதம் | ரூபா | சதம் |
| 500g | பருப்பு | 120 | 00 | ................ | ........ |
| 250g | தேயிலை | 900 | 00 | ................ | ........ |
| 100g | மிளகு | 1200 | 00 | ................ | ........ |
| | | மொத்தம் | | ................ | ........ |

25. ஒரு பிள்ளை வடக்கு நோக்கி 50 m தூரம் சென்று அங்கிருந்து வலதுபுறம் திரும்பி 100m தூரம் சென்று அங்கிருந்து தெற்குத்திசை நோக்கி 50 m தூரம் சென்று மீண்டும் அங்கிருந்து இடதுபுறம் 25m தூரம் சென்று தனது பயணத்தை நிறைவு செய்தான் எனின்,

ஆரம்ப இடத்திற்கும் தற்பொழுது நிற்கும் இடத்திற்கும் இடையிலான குறுகிய தூரம் யாது?

..........................................................................................................................

26. குமார் நூலகத்திற்குச் சென்று 2 மணித்தியாலங்கள் 40 நிமிடங்கள் செலவழித்த பின்னர் பி.ப. 5.15 மணிக்கு நூலகத்திலிருந்து புறப்பட்டு வீடு சென்றான். எனின்,


i) அவன் நூலகத்திற்குச் சென்ற நேரம் யாது?

..........................................................................................................................

ii) வீட்டிற்குச் சென்ற நேரத்தை நியம நேரத்தில் எழுதுக.

..........................................................................................................................

27.




மாணவர் குழுவொன்று அதிகம் விரும்பும் மலர்வகைகள் பற்றிய தகவல்கள் வரைபில் தரப்பட்டுள்ளன.

i) ரோசா மலரை விரும்புவோர் 9 பேர் எனின் அதனை வரைபில் குறித்துக் காட்டுக.

ii) குழுவில் உள்ள மொத்த மாணவர் தொகை எவ்வளவு?

..........................................................................................................................

28. 7m நாடாவிலிருந்து 350cm நீளமான துண்டு ஒன்று வெட்டப்பட்ட பின்னர், எஞ்சிய துண்டு 5 சம துண்டுகளாக வெட்டப்பட்டது எனின், 2 துண்டுகளின் நீளம் யாது?

..........................................................................................................................

29. ஒரு சீப்பில் 10 வாழைப்பழங்கள் இருந்தன. ஒரு வாழைப்பழத்தின் விலை ரூபாய் 7.50 எனின், அந்த வாழைப்பழச் சீப்பின் விலை யாது?

..........................................................................................................................

## விடைகள்

20. i) 12, 4
ii) 25, 32

21. 6, 8, 16, 20

22. 60 மாம்பழங்கள்

23. 32ℓ 625mℓ

24. 1) 60.00 2) 225.00 3) 120.00 4) 405.00

25. 125m

26. பி.ப. 2.35 / 14 : 35
17: 15

27. 1) பொருத்தமாகக் குறித்துக் காட்டப்படல்
2) 35 மாணவர்கள்

28. 1m 40 cm/ 140 cm

29. ரூபாய் 75.00

## கல்வி tv CHANNEL-1

**27.01.2022**
**வியாழக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | விஞ்ஞானம் |
| 06.00 | தரம்-07 | கணிதம் |
| 06.45 | தரம்-08 | தமிழ் |
| 07.30 | தரம்-09 | வரலாறு |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | புவியியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | பௌதீகவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | சங்கீதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | வரலாறு |
| 05.00 | A/Lவினாத்தாள் | சைவசமயம் கலைப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு |
| | மறு ஒளிபரப்பு | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | புவியியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | பௌதீகவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | சங்கீதம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் |
| 04.30 | தரம்-10 | தமிழ் |

## கல்வி tv CHANNEL - 2

**27.01.2022**
**வியாழக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | பாட்டு |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | கதை |
| 09.00 | தரம்-02 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-03 | சைவசமயம் |
| 10.30 | தரம்-03 | அழகியல் |
| 11.15 | தரம்-04 | சைவசமயம் |
| 12.30 | தரம்-04 | கணிதம் - paper |
| 01.15 | தரம்-05 | சைவசமயம் |
| 02.00 | தரம்-05 | Gentral knowledge |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | பாட்டு |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சுற்றாடற்கல்வி |
| 06.00 | தரம்-03 | சைவசமயம் |
| 06.45 | தரம்-03 | அழகியல் |
| 07.30 | தரம்-04 | சைவசமயம் |
| 08.15 | தரம்-04 | கணிதம் - paper |
| 09.00 | தரம்-05 | சைவசமயம் |
| 09.45 | தரம்-05 | Gentral knowledge |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சைவசமயம் |
| 12.30 | தரம்-03 | அழகியல் |
| 01.15 | தரம்-04 | சைவசமயம் |
| 02.00 | தரம்-04 | கணிதம் - paper |
| 02.45 | தரம்-05 | சைவசமயம் |
| 03.30 | தரம்-05 | Gentral knowledge |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |



## கல்முனை சுகாதார சேவை பணிப்பாளர் களவிஜயம்!

கல்முனை பிராந்திய புதிய சுகாதார சேவைகள் பணிப்பாளராக கடமைகளைப் பொறுப்பேற்ற மருத்துவர் ஐ. எல்.எம். றிபாஸ் சாய்ந்தமருது வைத்தியசாலைக்கு திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார். இதன்போது கல்முனைப் பிராந்திய பிரதிப் பிராந்திய சுகாதாரசேவைகள் பணிப்பாளர் மருத்துவர் எம். பி. அப்துல் வாஹித், திட்டமிடல் மருத்துவ அதிகாரி மருத்துவர் எம். சி. மாஹிர் ஆகியோரும் பங்கேற்றனர்.

சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலையின் மாவட்ட மருத்துவ அதிகாரி மருத்துவுர் எம்.எச்.கே.சனூஸ் தலைமையில் வைத்தியசாலையின் அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டன. இதன்போது, சாய்ந்தமருது வைத்தியசாலையை எதிர்காலத்தில் தொற்றுநோய் தடுப்பு சிகிச்சை நிலையமாக மாற்றியமைப்பது தொடர்பாகவும் கவனம் செலுத்தப் பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# உத்தரவாத விலைக்கு நெல்லை கொள்வனவு செய்யவேண்டும்!

## அம்பாறை விவசாய அமைப்பு கோரிக்கை

அம்பாறை, ஜன. 27

அம்பாறை மாவட்ட விவசாயிகளிடம் இருந்து பெரும்போக நெல்லை அரசாங்கம் உத்தரவாத விலைக்கு கொள்வனவு செய்யப்பட வேண்டும் என்று இலங்கை விவசாய அமைப்பின் தலைவர் ஏ.சீ. சிறாஜுதீன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், "ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் சுபீட்சத்தின் நோக்கு திட்டத்துக்கமைய, விவசாயிகளிடமிருந்து ஒரு கிலோகிராம் நெல் 95 ரூபாய்க்கு கொள்வனவு செய்வதாக அறிவிக்கப்பட்டிருந்தும் இதுவரை அதற்கான எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

"அம்பாறை மாவட்டத்தில் தற்போது பெரும்போக நெல் அறுவடை ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், விவசாயிகளிடமிருந்து நெல்லைக் கொள்வனவு செய்ய அரசாங்கம் எவ்வித நடவடிக்கையையும் எடுக்கவில்லை.

"இந்த மாவட்டத்தில் நெல் சந்தைப்படுத்தும் சபைக்குரிய நெற்களஞ்சிய சாலைகள் இதுவரை திறக்கப்படாமலுள்ளன. அரசாங்கம் உத்தரவாத விலைக்கு விவசாயிகளிடமிருந்து நெல்லை கொள்வனவு செய்யாமல் இருப்பதால் மிகவும் குறைந்த விலைக்கு தனியார் வியாபாரிகள் நெல்லை கொள்வனவு செய்கின்றனர்.

இதனால் விவசாயிகள் பெரும் நட்டத்தை எதிர்நோக்கி வருகின்றனர்" என்றார். (ஐ)

## பெறுகை அறிவித்தல்
## வலிகாமம் கிழக்கு பிரதேசசபை, புத்தூர்

### சபையினது கழிவகற்றல் செயற்பாட்டிற்காக வாகனங்களை வாடகைக்கு பெற்றுக்கொள்ளல்

01. தவிசாளர், பெறுகைக்குழு,வலிகாமம் கிழக்கு பிரதேசசபை, புத்தூர் அவர்களினால் தகுதி வாய்ந்த வழங்குனர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்குறிப்பிடப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைக்காக கோரப்படுகின்றது.
02. தேவையான தகைமைகள்,, மேலதிக தகவல்கள் பெறுகை ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.
03. ஆர்வமுள்ள வழங்குனர்கள் வலிகாமம் கிழக்கு பிரதேசசபையின் தலைமையலுவலகத்தில் மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ளலாம். அத்துடன்மேற்கூறிய இடத்தில் வேலைநாட்களில் காலை 09.00 மணி முதல் பி.ப 16.00 மணிவரை 27.01.2022 ஆம் திகதியிலிருந்து 11.02.2022ஆம் திகதி வரை யான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.
04. ஆர்வமுள்ள வழங்குனர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றையாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதி ,புத்தூர் எனும் முகவரியில் அமைந்துள்ள வலிகாமம் கிழக்கு பிரதேச சபையில் **27.01.2022** தொடக்கம் **11.02.2022** ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் மு.ப **9.00** மணி முதல் **14.00** மணி வரை மீளளிக்கப்படாத பணமாக ரூபா.1000/-(வற் தவிர்த்து)செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாக செலுத்தப்படல் வேண்டும்.
05. கேள்வி ஆவணங்களினை இருபிரதிகளில் தயாரித்து **11.02.2022**ம் திகதி **15:00** மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியவாறு தவிசாளர், பிரதேசசபை பெறுகைக் குழு, வலிகாமம் கிழக்கு பிரதேசசபை,புத்தூர் எனும் முகவரிக்கு பதிவுத்தபாலிலோ அல்லது அலுவலகத்திலுள்ள பெறுகைப்பெட்டியினுள் நேரடியாகவோ இடப்படல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட பெறுகைகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் பெறுகைதாரர் அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.கிடைக்கப்பெற்ற கேள்வியின் ஒருபகுதியினை மட்டும் ஏற்றுக் கொள்வதற்கு அல்லது இப்பெறுகையை முழுமையாக இரத்து செய்வதற்கு பெறுகைக்குழுவிற்கு அதிகாரமுண்டு.
06. இக்கேள்வி கோரலில் உள்ளநிபந்தனைகளில் அவசியமேற்படுமிடத்து மாற்றத்தை ஏற்படுத்தல், சேர்த்தல் அல்லது இல்லாது செய்தல் என்பவற்றின் அதிகாரம் கேள்விச்சபைக்கு உண்டு.

| இல | வேலை விபரம் | ஒப்பந்த இல | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் கேள்விப்பணை | |
|---|---|---|---|---|---|
| | | | | மீளளிக்க முடியாத கேள்வித் தொகை | செல்லுபடியாகும் காலம் |
| 1 | சபையினது கழிவகற்றல் சேவை தேவைகளிற்காக இழுவைப் பெட்டியுடன் உழவு இயந்திரங்கள் இரண்டினை சாரதியுடன் வாடகைக்கு அமர்த்துதல். | NP/14/41(15) /Tractor Service/ 2022 | 01வருடம் | 10,000.00 | 25.04.2022 |
| 2 | பக்கோ லோடர் (Backhoe loader Mechine) மற்றும் புல் டோசர் (Pull Dozer) என்பவற்றை மணிதியால அடிப்படையில் சேவைக்கு அமர்த்துதல் | NP/14/41(15) /Backco/ 2022 | 01வருடம் | 10,000.00 | 25.04.2022 |

**தியாகராஜா நிரோஷ்**
தவிசாளர்
உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு
வலிகாமம் கிழக்கு பிரதேசசபை,
புத்தூர்.

27.01.2022

## மகா கும்பாபிஷேகம்!

மட்டக்களப்பு ஜெயந்திபுரம் அருள்மிகு ஸ்ரீ குமாரத்தன் மகா கும்பாபிஷேக மகா யாக பெரும்சாந்தி விழா எதிர்வரும் எதிர்வரும் பெப்ரவரி 6ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது.

ஆலய பிரதம குரு சைவ சிவஸ்ரீ ஜெ. ஜெயப்பிரதாபன் சர்மா தலைமையில் பிரதிஷ்டா பிரதமகுரு ஆகம கிரியா சிவஸ்ரீ நாராயண சண்முகநாதக் குருக்களால் கும்பாபிஷேகப் பெருவிழா நிகழ்த்தப்படவுள்ளது. எதிர்வரும் 2ஆம் திகதி கும்பாபிஷேக கிரியைகள் ஆரம்பமாகும். 4, 5 ஆம் திகதிகளில் எண்ணெய் காப்பு சாத்தும் நிகழ்வு இடம்பெறும். இதைத் தொடர்ந்து மறுநாள் 6 ஆம் திகதி மகா கும்பாபிஷேகம் இடம்பெறும். (ஐ)

## பதுளையில் பெண் கொலை; சந்தேகநபர் கைதானார்!

கொழும்பு, ஜன.27

பதுளை வேவெஸ்ஸ தோட்டம், தெபெத்த பிரதேசத்தில் பெண்ணொருவர் படுகொலை செய்யப்பட்ட நிலையில் அந்த படுகொலையுடன் தொடர்புடைய சந்தேக நபரை, நேற்று முன்தினம் மாலை பதுளை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

வேவெஸ்ஸ தோட்டத்தை சேர்ந்த 30 வயது இளைஞரே கைதுசெய்யப்பட்டுள்ளார். குறித்த தோட்டத்தில் 60 வயதுடைய பெண்ணொருவர் படுகொலை செய்யப்பட்ட நிலையில், நேற்று முன்தினம் சடலமாக மீட்கப்பட்டார். குறித்த பெண் பாலியல் வன்புணர்வுக்கு உட்டுப்படுத் தப்பட்டு மிகவும் கொடுராமான முறையில் படுகொலை செய்யப்பட்டிருக்கலாம் என்று, பொலிஸார் சந்தேகம் தெரிவித்தனர்.

பெண்ணின் மரணத்துடன் தொடர்புடைய சந்தேக நபரை கைதுசெய்யுமாறு வலியுறுத்தி பிரதேச மக்கள் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டதால் அப்பகுதியில் பதற்றமான நிலைமை ஒன்றும் ஏற்பட்டிருந்தது.

இந்நிலையில் இச்சம்பம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வந்த பொலிஸார் சந்தேகத்தின் பேரில் ஒருவரை கைதுசெய்துள்ளனர்.

இது தொடர்பில், பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (கே)



## விடுவிக்கப்பட்ட வீதியை அங்கஜன் எம்.பி. பார்வை!

யாழ்ப்பாணம், ஜன. 27

யாழ்ப்பாணம் விமான நிலையத்துக்கு செல்லும் கட்டுவன் - மயிலிட்டி வீதியின், விடுவிக்கப்பட்ட 400 மீற்றர் வீதியை பாராளுமன்ற உறுப்பினரும் மாவட்ட ஒருங்கிணைப்பு குழு தலைவருமான அங்கஜன் இராமநாதன் நேரில் சென்று பார்வையிட்டார்.

இதன்போது, "பொது மக்களின் காணிகளை விடுவிப்பதற்கான ஆரம்ப செயல்பாடாக இவ்வீதி விடுவிப்பை கருதவேண்டியது அவசியமானதாகும் என அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

இந்த விஜயத்தின்போது தெல்லிப்பழை பிரதேச செயலாளர் ச.சிவஸ்ரீ, வலிகாமம் வடக்கு பிரதேச சபை தவிசாளர் எஸ். சுகிர்தன், வீதி அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டிருந்தனர். (ஐ)

## ஆன்மீக கற்கை நெறிக்கு விண்ணப்பங்கள் கோரல்!

மட்டக்களப்பு, ஜன. 27

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில், காரைதீவில் அமைந்துள்ள இந்து சமய கலாசார கற்கைகள் நிறுவக சுவாமி விபுலானந்தர் பயிற்சி நிலையத்தில், முதல்தடவையாக பல ஆன்மீக கற்கை நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

யோகாசனம், பண்ணிசை, பரத நாட்டியம், வயலின், மிருதங்கம் , கதாப்பிரசங்கம் மற்றும் பேச்சாற்றலை வளர்த்தல் என்பவற்றில் 6 மாத காலம் பயிற்சி அளிக்கப்படும். வார இறுதி நாள்களில் நடைபெறவிருக்கும் இந்த பயிற்சிநெறிகள், பெப்ரவரி 5ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளன.

இந்து சமய அறநெறிப்பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஆர்வலர்கள் இவற்றுக்கு விண்ணப்பிக்க முடியுமென இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் அருளாநந்தம் உமாமகேஸ்வரன் தெரிவித்தார். (ஐ)

# பத்திரிகையாளரை திட்டிவிட்டு மன்னிப்பு கேட்டார் ஜோ பைடன்!

வொஷிங்டன், ஜன. 27

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், ஒலிவாங்கி இருப்பதை அறியாமல் செய்தியாளர் ஒருவரை கெட்ட வார்த்தையில் திட்டிவிட்டு பின் பெருந்தன்மையுடன் மன்னிப்பு கோரினார்.

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், வொஷிங்டனில் உள்ள வெள்ளை மாளிகையில் பணவீக்கம் குறித்த கூட்டத்தில் பங்கேற்ற பின் செய்தியாளர்களை சந்தித்தார்.

அப்போது 'பொக்ஸ் நியூஸ்' செய்தியாளரான பீற்றர் டூசி, "பணவீக்கத்தை அரசியல் சுமையாக கருதுகிறீர்களா," என கேட்டார்.

அதை மறுத்த ஜோ பைடன், ஒலிவாங்கி இருப்பதை அறியாமல் "அதிக பணவீக்கம் என்பது அதிக சொத்து," என கூறினார்.பின், கேள்வி கேட்ட பீற்றர் டூசி மீதுள்ள கோபத்தில் கெட்ட வார்த்தையை முணுமுணுத்தார்.

இது ஒலிவாங்கியில் பதிவானது பற்றி பின் அறிந்த ஜோ பைடன், ஒரு மணி நேரத்தில் பீற்றர் டூசியை தொலைபேசியில் அழைத்து, தனிப்பட்ட முறையில் திட்டவில்லை என கூறி மன்னிப்பு கோரினார்.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட பீற்றர் டூசி, "ஜோ பைடன் தன் தவறை உணர்ந்து உடனடியாக மன்னிப்பு கேட்டது அவரது பெருந்தன்மையை காட்டுகிறது," என்றார். (அ)



## 5 ஆவது ஏவுகணையையும் செலுத்தியது வடகொரியா!

பியொங்யாங், ஜன. 27

வடகொரியா தொடர்ச்சியாக ஏவுகணை சோதனைகளை நடத்தி வருகிறது.

சர்வதேச நாடுகளின் பொருளாதார தடை மற்றும் கொரோனா தொற்று காரணமாக வடகொரியாவின் பொருளாதார நிலை மிகவும் மோசமடைந்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

எனினும் அந்த நாடு பொருளாதாரத்தை மேம்படுத்துவதில் கவனம் செலுத்தாமல் தொடர்ச்சியாக ஏவுகணை சோதனைகளை நடத்தி வருகிறது.

இந்த நிலையில் வடகொரியா நேற்று முன்தினம் ஒரே நாளில் 2 ஏவுகணைகளை சோதனை செய்துள்ளது.

நாட்டின் தெற்கு பகுதியில் இருந்து 2 குரூஸ் ரக ஏவுகணைகளை சோதனை செய்ததாக தென்கொரியா இராணுவம் தெரிவித்துள்ளது.

இது, வடகொரியா இந்த மாதத்தில் மாத்திரம் நடத்திய 5ஆவது ஏவுகணை சோதனை என்பது குறிப்பிடத்தக்கது. (அ)



## தென்கொரியாவில் தினசரி கொரோனா தொற்று உயர்வு!

சியோல், ஜன. 27

தென் கொரியாவின் தினசரி புதிய கொரோனா வைரஸ் தொற்று நேற்று முன் தினம் புதன்கிழமை முதல் 13,000 ஐத் தாண்டியது, ஓமைக்ரான் மாறுபாட்டின் பரவலால் உந்தப்பட்டு, வானளாவிய தேவையைப் பூர்த்தி செய்ய அரசாங்கம் ஒரு புதிய பைலட் சோதனைத் திட்டத்தைத் தொடங்கியுள்ளது.

முந்தைய 24 மணி நேர காலப்பகுதியில் பதிவு செய்யப்பட்ட 13,012 வழக்குகள், கடுமையான சமூக விலகல் விதிகளை நீடித்த போதிலும், முதல் எண்ணிக்கை 8,000 ஐ எட்டிய ஒரு நாளுக்குப் பிறகு பதிவானது.

கடந்த வாரம் தென் கொரியாவில் ஒமைக்ரோன் ஆதிக்கம் செலுத்தும் மாறுபாடாக மாறியது. மேலும் வரும் வாரங்களில் தினசரி எண்கள் இரட்டிப்பாகும் அல்லது இன்னும் உயர்ந்த நிலைக்கு உயரக்கூடும் என்று சுகாதார அதிகாரிகள் எச்சரித்தனர். (அ)

## சுமார் 61 கோடி மாணவர் கல்வி வாய்ப்பை இழப்பு

ஜெனிவா, ஜன. 27

கொரோனா காரணமாக பாடசாலைகள் மூடப்பட்டதால் உலகம் முழுவதும் சுமார் 61 கோடி மாணவர்கள் கல்வி கற்கும் வாய்ப்பை இழந்துள்ளனர்.

சர்வதேச குழந்தைகள் பாதுகாப்பு அமைப்பான யுனிசெப் அமைப்பு இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளது.

இது குறித்து குறித்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில், 'பாடசாலைகள் மூடப்பட்டுள்ளமையினால் பல நாடுகளில் இலட்சக்கணக்கான குழந்தைகள் அடிப்படை திறன்களை பெறுவதற்கான வாய்ப்புகளை இழந்துள்ளதாகவும், அதனால் மன இறுக்கம், போதிய ஊட்டச்சத்து குறைவின்மை உள்ளிட்ட பல்வேறு இன்னல்களை குழந்தைகள் எதிர்கொள்வதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. 10 வயதிற்குட்பட்ட குழந்தைகளில் 70 சதவீதம் பேர் சாதாரண வாசகங்களை கூட வாசிக்கக்கூடிய திறனற்று உள்ளதாகவும், பாடசாலையில் இடைநிற்றல் அளவு அதிகரித்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்காரணமாக விரைவில் பாடசாலைகளை திறக்குமாறு உலக நாடுகளிடம் யுனிசெப் அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது. (அ)





## ஹங்கேரியில் நவீன அரங்கம்!

### இயற்கை சூழலில் இசையை ரசிக்கலாம்

புடாபெஸ்ட், ஜன. 27

ஹங்கேரியில் இயற்கை சூழலில் இசையை ரசிக்கும் விதமாக அரங்கம் ஒன்று வடிவமைக்கப்பட்டுள்ளது.

ராட்சத காளானை போல் காட்சியளிக்கும் இந்த அரங்கம் தலைநகர் புடாபெஸ்டின் மையப்பகுதியில் உள்ள பூங்காவில் கட்டப்பட்டுள்ளது. சூரிய ஒளிக்கதிர்கள் நுழைவதற்காக அரங்கின் மேற்கூரையில் 100 ராட்சத துளைகள் இடப்பட்டுள்ளன. இரைச்சலின்றி இசை மெட்டுகளை ரசிப்பதற்கு ஏற்றவாறு இங்குள்ள கண்ணாடி சுவர்கள் அமைக்கப்பட்டுள்ளன.

40 அடி உயரம் கொண்ட இந்த 94 கண்ணாடி சுவர்களை இசையின் இயல்புகளுக்கு ஏற்ப மாற்றி அமைக்கும் வசதியும் உள்ளது. (அ)

# விளாடிமிர் புடின் மீது தடை விதிக்கப்படும்!

### அமெரிக்க ஜனாதிபதி எச்சரிக்கை

வொஷிங்டன், ஜன. 27

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் மீது தடை விதிப்பதற்கு உத்தேசித்துள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.

உக்ரைனை ரஷ்யா ஆக்கிரமிக்குமாயின் இவ்வாறு தடை விதிக்கப்படலாம் என அவர் குறிப்பிட்டார்.

ரஷ்யா தமது தென் மேற்கு எல்லையிலுள்ள நாட்டின் மீது நடவடிக்கை எடுக்குமாயின், பாரிய விளைவுகளை சந்திக்க நேரிடும் என அவர் கூறியுள்ளார்.

ரஷ்யா மீது மேற்குலக நாடுகள் தொடர்ந்தும் எச்சரிக்கை விடுத்து வரும் நிலையில் அமெரிக்கா தடை குறித்து அறிவித்துள்ளது.

இதேவேளை, அமெரிக்கா



உள்ளிட்ட நாடுகள் தேவையற்ற பதற்றத்தை தோற்றுவிப்பதாக ரஷ்யா குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளது என்பதுக் குறிப்பிடத்தக்கது. (அ)



# ஜப்பானின் சில பகுதிகளில் கடுமையான கட்டுப்பாடுகள்

ரோக்கியோ, ஜன. 27

ஜப்பானில் மேலும் 18 வட்டாரங்களுக்கு கடுமையான கட்டுப்பாடுகளை விரிவுபடுத்த அரசாங்க ஆலோசனைக் குழு அனுமதி வழங்கவுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதன் காரணமாக ஜப்பானின் 70 சத வீதத்துக்கும் மேற்பட்ட பகுதிகளில் கட்டுப்பாடுகள் நடைமுறையில் இருக்கும் என தெரிவிக்கப்படுகின்றது.

மேற்கு ஜப்பானின் ஒசாக்கா, கியோட்டோ உள்ளிட்ட பகுதிகளும் இவற்றில் உள்ளடங்கும் என குறிப்பிடப்படுகின்றது.

ஜப்பானில் கடந்த சில வாரங்களாக கொரோனா தொற்று காரணமாக மருத்துவமனைகளில் அனுமதிக்கப்படுவோர் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இந்தநிலையில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை முதல் அடுத்த மாதம் 20 ஆம் திகதி வரை புதிய கட்டுப்பாடுகள் நடைமுறையில் இருக்கும் என தெரிவிக்கப்படுகின்றது. (அ)



# ஓய்வை அறிவித்தார் தில்ருவன் பெரேரா!

கொழும்பு, ஜன. 27

இலங்கை அணியின் தில்ருவன் பெரேரா சர்வதேச கிரிக்கெட் அரங்கிலிருந்து விலகுகிறார் என்று இலங்கை கிரிக்கெட் சபைக்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளார்.

சகல துறை வீரரான 39 வயதான தில்ருவன் பெரேரா 43 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 161 விக்கெட்களை கைப்பற்றியுள்ளார். அத்துடன், 7 அரைச் சதங்களுடன் 1,303 ஓட்டங்களை எடுத்துள்ளார்.

தில்ருவன் பெரேரா டெஸ்ட் வீரராக பெரிதும் அறியப்பட்டாலும், 2007 ஆம் ஆண்டிலேயே சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் அரங்கில் காலடி எடுத்து வைத்தார். இதன் பின்னர் 7 ஆண்டுகள் கழித்தே டெஸ்ட் அரங்கில் அறிமுகமானார்.

இலங்கை அணிக்காக அதிகூடிய விக்கெட்களை கைப்பற்றிய சுழற்பந்துவீச்சாளர்கள் வரிசையில் முரளிதரன் (800) மற்றும் ஹேரத்துக்கு (433) அடுத்தபடியாக மூன்றாவது இடத்தில் தில்ருவன் பெரேரா உள்ளார். அதிக டெஸ்ட் விக்கெட்களை கைப்பற்றிய 5 ஆவது இலங்கையராகவும் உள்ளார்.

சர்வதேச ஒருநாள் அரங்கில் 13 போட்டிகளில் மாத்திரமே விளையாடிய இவர், 13 விக்கெட்களை கைப்பற்றியுள்ளதுடன், 152 ஓட்டங்களையும் எடுத்துள்ளார்

முத்தையா முரளிதரன் விளையாடிய காலத்தில் தில்ருவான், ரங்கன ஹேரத் போன்றோருக்கு அணியில் நிரந்தர இடம் கிடைக்கவில்லை. எனினும், தில்ருவான் பெரேரா விளையாடிய சந்தர்ப்பங்களில் அணிக்காக சிறப்பாக செயல்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

எனினும், உள்ளூர் போட்டிகளில் தொடர்ந்து விளையாடுவார் என்று தில்ருவன் பெரேரா தெரிவித்துள்ளார். (ஐ)

# ஆஸி. ஓப்பன் ரென்னிஸ் போராடி வென்றார் நடால்!



மெல்பர்ன், ஜன. 27

அவுஸ்திரேலிய ஓப்பன் ரென்னிஸ் தொடரின் ஒற்றையர் பிரிவு அரையிறுதிக்கு நடால் முன்னேறியுள்ளார்.

அவுஸ்திரேலியாவின் மெல்பர்ன் நகரில் நடப்பு ஆண்டின் முதல் கிராண்ட்ஸ்லம் தொடரான அவுஸ்திரேலிய ஓப்பன் ரென்னிஸ் நடக்கிறது. ஆண்கள் ஒற்றையர் பிரிவின் காலிறுதியில் 'நம்பர் 5' வீரர், ஸ்பெயினின் நடால், கனடாவின் ஷபோவலோவை சந்தித்தார். முதல் இரு செற்றை நடால் 6:3, 6:4 என கைப்பற்றினார். பின் திடீரென சொதப்பிய நடால் அடுத்த இரு செற்களை 4:6, 3:6 என்ற கணக்கில் இழந்தார்.

வெற்றியாளரை முடிவு செய்ய நடந்த ஐந்தாவது செட்டை நடால் 6:2 என வசப்படுத்தினார். முடிவில் நடால் 6:3, 6:4, 4:6, 3:6, 6:3 என்ற கணக்கில் போராடி வென்று, அரையிறுதிக்கு முன்னேறினார். (ஐ)

# இலங்கை அணியின் இடைக்கால பயிற்றுநராக ருமேஸ் ரத்நாயக்க!

கொழும்பு, ஜன. 27

எதிர்வரும் அவுஸ்திரேலியாவுடான இருபது - 20 தொடருக்கு இலங்கை கிரிக்கெட் அணியின் இடைக்கால பயிற்சியாளராக இலங்கை அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் ருமேஸ் ரத்நாயக்க நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை கிரிக்கெட்டின் தொழில்நுட்ப ஆலோசனைக் குழுவுடன் கலந்தாலோசித்து, இலங்கை கிரிக்கெட் நிர்வாகக் குழுவால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

கோவிட்-19 தொற்றுக்குள்ளான நிலையில் தற்சமயம் சுய தனிமைப்படுத்தலில் இருக்கும் அவர், இலங்கை அணியுடன் அவுஸ்திரேலியா புறப்படமாட்டார்.

மாறாக தனிமைப்படுத்தல் காலம் நிறைவடைந்ததும், போட்டிகள் ஆரம்பமாகுவதற்கு முன்பாக அவர் இலங்கை அணியுடன் இணைவார்.

இதனிடையே அவுஸ்திரேலிய சுற்றுப்பயணத்தில் பங்கேற்கும் 20 வீரர்களை கொண்ட இலங்கை அணி நேற்று அறிவிக்கப்பட்டது.



இரு அணிகளுக்கும் இடையிலான ஐந்து போட்டிகள் கொண்ட இருபது - 20 தொடர் எதிர்வரும் பெப்ரவரி 11 முதல் சிட்னி, கன்பெர்ரா மற்றும் மெல்பர்ன் மைதானங்களில் நடைபெறவுள்ளன. (ஐ)

# அவுஸ்திரேலிய ரி- 20 தொடர் இலங்கை அணி அறிவிப்பு!



கொழும்பு, ஜன. 27

எதிர்வரும் பெப்ரவரி 11 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள அவுஸ்திரேலியாவுக்கு எதிரான ஐந்து போட்டிகள் கொண்ட இருபது - 20 தொடருக்கான இலங்கை அணியில் பல புதிய வீரர்கள் இடம்பிடித்துள்ளனர்.

தசூன் சானக தலைமையிலான 20 பேர் கொண்ட இலங்கை அணியில் தொடக்க ஆட்டக்காரரான தனுஷ்க குணதிலகவும் இடம்பிடித்துள்ளார்.

அவருக்கு மேலதிகமாக குசல் மெண்டிஸும் அணியில் உள்வாங்கப்பட்டுள்ளார்.

தனுஷ்க குணதிலக்க, குசல் மெண்டிஸ் மற்றும் நிரோஷன் டிக்வெல்ல ஆகியோருக்கு கடந்த ஆண்டு இங்கிலாந்து சுற்றுப் பயணத்தின் போது பாதுகாப்பு உயிர் குமிழி உத்தரவுகளை மீறியமைக்காக தடை விதிக்கப்பட்டிருந்தது.

இதேவேளை, பெயரிடப்பட்ட அணியில் இதற்கு முன்னர் உப தலைவராக இருந்த தனஞ்சய டி சில்வா இடம்பெறாத நிலையில், சரித் அசலங்காவுக்கு உப தலைவர் பதவி வழங்கப்பட்டுள்ளது.

இலங்கை அணியின் முன்னணி சுழற்பந்து வீச்சாளர் வனிந்து ஹசரங்க மீண்டும் அணிக்கு திரும்பியுள்ளதுடன், அவருக்கு மேலதிகமாக மற்றுமொரு சுழற்பந்து வீச்சாளர் ஜெப்ரி வான்டர்சேயும் அணியில் இணைக்கப்பட்டுள்ளார்.

அணி விவரம்: தசூன் சானக (தலைவர்), சரித அசலங்க ( உப தலைவர்), அவிஷ்க பெர் னாண்டோ, பதும் நிசங்க, தனுஷ்க குணதிலக்க, குசல் மெண்டிஸ், தினேஷ் சந்திமால், சாமிக கருணாரத்ன, ஜனித் லியனகே, கமில் மிஷாரா, ரமேஷ் மெண்டிஸ், வனிந்து ஹசரங்க, லஹிரு குமார, நுவான் துஷார, துஷ்மந்த சாமீர, பினுர பெர்னாண்டோ, மகேஷ் தீக்ஷன, ஜெஃப்ரி வாண்டர்சே, பிரவீன் ஜயவிக்ரம, சிரான் பெர்னாண்டோ. (ஐ)

# ஆஸி. ஓப்பன் ரென்னிஸ் ஹாலேப் அதிர்ச்சி தோல்வி!

மெல்பர்ன், ஜன. 27

அவுஸ்திரேலிய ஓப்பன் ரென்னிஸ் தொடரின் நான்காவது சுற்றில் சிமோனா ஹாலேப், சபலென்கா ஆகியோர் அதிர்ச்சி தோல்விடைந்தனர்.

அவுஸ்திரேலியாவின் மெல்பர்ன் நகரில் நடப்பு ஆண்டின் முதல் கிராண்ட்ஸ்லம் தொடரான அவுஸ்தி ரேலிய ஓப்பன் ரென்னிஸ் நடக்கிறது. இதில், பெண்கள் ஒற்றையர் பிரிவு நான்காவது சுற்றில் பிரான்ஸின் அலைஸ் கார்னெட், ருமேனியாவின் சிமோனா ஹாலேப்பை 6:4, 3:6, 6:4 என வீழ்த்தினார். 63 கிராண்ட்ஸ்லம் தொடர்களில் பங்கேற்ற கார்னெட், தற்போது தான் முதன் முறையாக காலிறுதிக்கு முன்னேறினார்.

மற்றொரு போட்டியில், உலகின் 'நம்பர் 2' வீராங்கனை பெலாரஸின் சபலென்கா, எஸ்தோனியாவின் கையா கனேபியை சந்தித்தார்.

முதல் செற்றை சபலென்கா 7:5 என வென்றார். அடுத்த செற்றை 2:6 என எளிதாக இழந்தார். 'ரை பிறேக்கர்' வரை சென்ற மூன்றாவது செற்றையும் சபலென்கா 6:7 என நழுவவிட்டார். முடிவில் சபலென்கா 7:6, 2:6, 6:7 என்ற செற் கணக்கில் தோல்வியடைந்தார். (ஐ)



# ஊழல் அற்ற ஆட்சி அமைக்க எங்களிடமே வல்லமையுண்டு



## கூறுகிறார் அனுரகுமார

கொழும்பு, ஜன. 27

**ஊழல் அற்ற ஆட்சியை உருவாக்கக்கூடிய சர்வ வல்ல மையும் தேசிய மக்கள் சக்தியில் இருக்கின்றது என்று ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

ரவி கருணாநாயக்க, பஸில் ராஜபக்ஷ உள்ளிட்டவர்கள் இல்லாது எப்படி நாட்டை ஆள்வது என சிலர் கேட்கின்றனர். எம்மால் முடியும். திறமையானவர்கள் எம்முடன் இருக்கின்றனர். என்றுமில்லாதவாறு சிறப்பானதொரு ஆட்சியை வழங்கக்கூடியதாக இருக்கும்.

எமது ஆட்சி ஊழல் அற்ற ஆட்சியாகவே அமையும். ஊழல் அற்றவர்களை தண்டிக்கக்கூடிய தகைமை ஊழல் அற்றவர்களுக்கே இருக்கின்றது. நாம் எந்தவொரு மோசடியிலும் ஈடுபட்டது கிடையாது.

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஓய்வூதியம் தேவையில்லை. முன்னாள் ஜனாதிபதிகளுக்கான சலுகைகளும் தேவையில்லை. எனவே, மாற்றம் குறித்து மக்கள் சிந்திக்க வேண்டும். அதற்கான சூழல் உருவாகியுள்ளது - என்றார். (அ)



# பாகிஸ்தான் பிரதமருடன் அமைச்சர் பந்துல சந்திப்பு

கொழும்பு, ஜன. 27

பாகிஸ்தானுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள வர்த்தக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன, பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கானை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

பாகிஸ்தான் பிரதமர் அலுவலகத்தில் இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளதாக வர்த்தக அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை - பாகிஸ்தான் வர்த்தக உடன்படிக்கையை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள தொடர்ச்சியான கலந்துரையாடல்கள் மற்றும் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வது அவசியம் என பாகிஸ்தான் பிரதமர் இதன்போது தெரிவித்துள்ளார்.

பௌத்த சமூகத்தினர் பாகிஸ்தானுக்கு விஜயம் செய்வதை மேலும் மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு உத்தேசித்துள்ளதாக பாகிஸ்தான் பிரதமர் இந்த சந்திப்பின்போது தெரிவித்ததாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானுடனான கொடுக்கல், வாங்கல்களை மேலும் வலுப்படுத்துவதற்காக அந்நாட்டுக்கு விஜயம் மேற்கொண்டிருந்த தாம் உள்ளிட்ட வர்த்தகக் குழுவினருக்கு வழங்கிய வரவேற்புக்கு வர்த்தக அமைச்சர், பந்துல குணவர்தன நன்றி தெரிவித்தார் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# ஓமானிடம் கடன் பெறாதது ஏன்? இலங்கை அரசாங்கம் விளக்கம்

கொழும்பு, ஜன. 27

ஓமானிடம் ஏன் கடன் பெறுக்கொள்ளப்படவில்லை என்பது குறித்து அரசாங்கம் அதிகாரபூர்வமாக விளக்கம் அளித்துள்ளது.

எரிபொருள் கொள்வனவு செய்யும் நோக்கில் அரசாங்கம், 3.6 பில்லியன் அமெரிக்க டொலர் கடனை ஓமானிடம் கோரியிருந்தது.

எனினும், ஓமானிய அரசாங்கம் விதித்த நிபந்தனைகளின் காரணமாக இந்த கடன் தொகையை அரசாங்கம் பெற்றுக்கொள்ளவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் டலஸ் அழப்பெரும இந்த விடயத்தை ஊடகங்களிடம் குறிப்பிட்டுள்ளார்.

அந்நிய செலாவணி நெருக்கடி நிலைமை காரணமாக கடந்த 2021ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் ஓமானிடம் கடன் பெற்றுக்கொள்ள அமைச்சரவை அனுமதி வழங்கியிருந்தது.

கடனுக்கான வட்டியில் சலுகை வழங்குவதற்கு எண்ணெய் பற்றிய தேடுதல்களை மேற்கோள்ள ஓர் இடத்தை ஒதுக்கித் தருமாறு இலங்கையிடம் ஓமான் கோரியிருந்தது.

எனினும் இந்தக் கோரிக்கையை இலங்கை அரசாங்கம் நிராகரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ரயில் பெட்டிகளை இறக்குமதி செய்து பல பில்லியன் ரூபா பணம் வீணடிப்பு!

கொழும்பு, ஜன. 27

தேவையற்ற நேரத்தில் புதிய ரயில் பெட்டிகளை இறக்குமதி செய்ததன் மூலம் பல பில்லியன் ரூபா பொதுமக்களின் பணம் வீணடிக்கப்பட்டுள்ளதாக ரயில் தொழிற்சங்கக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது ரயில் தொழிற்சங்க கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் ஏ.எஸ்.விதானகே இதனைத் தெரிவித்தார். (அ)

# கணேஷ் கெங்காதரனின் முதலாம் ஆண்டு நினைவு



யாழ்ப்பாணம், ஜன. 27

தேனீ சஞ்சிகை மற்றும் இணையத்தளத்தின் ஆசிரியர் அமரர் கணேஷ் கெங்காதரனின் (ஜெமினி) முதலாம் ஆண்டு நினைவுதினம் நேற்று புங்குடுதீவு 6ஆம் வட்டாரத்தில் இடம்பெற்றது.

இதன்போது ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் ஜேர்மன் கிளையின் சுமார் 60,000 ரூபா நிதிப் பங்களிப்பில் புங்குடுதீவு 6ஆம் வட்டாரத்தில் இயங்கும் ஐங்கரன் முன்பள்ளிக்கு பாண்ட் வாத்தியக் கருவிகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் பா.கஜதீபன் மற்றும் ஊர்காவற்றுறை தொகுதியின் தமிழ் அரசுக் கட்சி அமைப்பாளர் குணாளன் ஆகியோர் கலந்துகொண்டனர். (அ)

# சீனாவிடமிருந்து அரசு மீள்வதற்காக தமிழர் அரசியலை பலியாக்க முயற்சி

## கஜேந்திரன் எம்.பி.குற்றச்சாட்டு




யாழ்ப்பாணம், ஜன. 27

சீனாவின் பிடியில் இருந்து இலங்கையை மீட்டு இந்தியாவின் காலடிக்குள் கொண்டு வருவதற்காக தமிழர் அரசியலை பலியாக்குவதற்கான முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செ. கஜேந்திரன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஒற்றையாட்சியை நிராகரிக்கக் கோரி சாவகச்சேரி நகர் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விழிப்புணர்வு நிகழ்வின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்ப்பாணம் - நல்லூர் முருகன் ஆலய வீதியில் பேரணி ஒன்று ஆரம்பமாகி கிட்டு பூங்கா வரை சென்று அங்கே ஒரு பொதுக்கூட்டம் நடைபெற இருக்கின்றது. அந்த பேரணியின் பிரதான நோக்கம் 13 ஆவது திருத்தச் சட்டத்தை தீர்வாக ஏற்று நடைமுறைப் படுத்தவேண்டும் என்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் விக்கினேஸ்வரன், சிறிகாந்தா அணியினர் இந்தியாவிடம் விடுத்துள்ள கோரிக்கையானது தமிழ் மக்களுடைய எதிர் காலத்தை குழி தோண்டிப் புதைக்கும் ஒரு செயற்பாடு.

34 வருடங்களாக நடைமுறையில் இருக்கும் 13 ஆவது திருத்தச் சட்டம் தமிழ் மக்களைப் பாதுகாக்கவில்லை. தமிழ் மக்களின் அழிவைத் தடுக்கவில்லை. தமிழ் மக்களுக்கு எந்தவிதமான உரிமைகளையும் தரவில்லை. அது முழுமையாக நடைமுறையில் இருக்கும்போது அதனை நடைமுறைப்படுத்தவேண்டும் என்பது தமிழ் மக்களை ஏமாற்றும் செயற்பாடு. 74 வருடங்களில் முதல் தடவையாக இந்த ஒற்றையாட்சி அரசமைப்பை ஆதரிக்கப் போகிறார்கள். ஆகவே அந்த சதியை முறியடிக்கவேண்டும்.அதற்கு எதிராக தமிழ் மக்கள் கிளர்ந்தெழ வேண்டும்.ஒற்றையாட்சியை அரசியல் தீர்வாக ஏற்றுக்கொள்வதனை ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாது.

மக்கள் பெரும் பொருளாதார நெருக்கடியை எதிர் நோக்கியுள்ளனர். வாழ்க்கைச் செலவு அதிகரித்து வருகிறது. நாளாந்தம் மூன்றுவேளை சாப்பிட முடியாத அளவுக்கு மக்களின் நிலை உள்ளது. நாட்டில் மின்சாரம் கூட தொடர்ச்சியாக வழங்க முடியாத நிலை காணப்படுகிறது. நாடு பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியிருக்கும் இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தமிழர்களின் தமிழ்த் தேசிய நிலைப்பாடுகளை கைவிடச் செய்து சீனாவின் பிடியில் இருந்து இலங்கையை வெளியே எடுக்கவும், இந்தியாவின் காலடிக்குள் கொண்டு வருவதற்காகவும் தமிழ் அரசியலை பலியாக்குவதற்கான முயற்சிகள் தான் இங்கே நடந்து கொண்டிருக்கின்றது- என்றார். (அ)

**மணமகள் தேவை**

ஆண் 31 வயது. யாழ். இந்து வேளாளர், சுதுமலை, சைவபோசனம், உத்தரட்டாதி நட்சத்திரம் B.Sc(special) Computational Physics (Colombo) - ஆசிரியர் (physics & Computer Science) சைவபோசனமுடைய பெண் விரும்பத்தக்கது. ஆனால் கட்டாயமில்லை.

தொலைபேசி - 0762213233

## தமிழரின்...

டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு: -

மாகாண சபை முறைமையை முற்று முழுதாக நீக்கி தமிழர்களை பலம் அற்றவர்களாக ஆக்கு வோம் என்ற சபதத்தோடு அரச கட்டளை ஏறியவர் இன்றைய ஜனாதிபதி. புதிய அரசியல் யாப்பின் மூலம் அதை நிறைவேற்ற தயாராகி வருகிறார்.

ஒரு நாடு ஒரு சட்டம் என்ற செயலணியின் தலைவர் ஞானசாரதேரர் மாகாண சபை முறையை அழித்து ஒழித்து தமிழர்களுக்கு இருக்கும் ஆகக் குறைந்த அதிகார முறை மையை நீக்குவோம் என்ற செயற்பாட்டை முன்னெடுத்து வருகிறார்.

அமைச்சரவை அந்தஸ்துடன் இந்தியாவுக்கான தூதுவராக சென்ற மிலிந்த மொரகொட தமிழர்கள் அரசியல் தீர்வை கோரவில்லை, அன்றாட வாழ்க்கை பிரச்னைகளை தீர்க்க கோருகிறார்கள் என்று கூறி வருகிறார். மாகாண சபை முறைமை ஒரு வெள்ளை யானைக்கு ஒப்பானது என்று இந்தியாவில் தெரிவித்து வருகிறார்.

வியாத்மக என்ற சிங்களப் புத்திஜீவிகள் அமைப்பு மாகாண சபை முறைமையை ஒழித்துக்கட்டி தமிழர்களை எமது தாயக பூமியிலேயே அரசியல் பலம் அற்றவர்களாக ஆக்க முயற்சி செய்கிறார்கள். மகா சங்க பவுத்த பிக்குகள் இதே திசையிலே பயணிக்கிறார்கள்.

13ஆவது திருத்த சட்டம் எமது அரசியல் தீர்வு அல்ல என்பதை நாம் தெட்டத் தெளிவாக கூறியுள்ளோம். நிரந்தரமான அரசியல் தீர்வை நாம் எட்டும் வரையும் மாகாண சபை முறைமை அரசியல் யாப்பில் இருப்பது அவசியமாகும். இதை நீக்கிவிட்டாலோ அல்லது பலவீனமாக்கினாலோ தமிழர் இருப்பே எந்த நாட்டில் கேள்விக்குறியாகிவிடும். இதை நாம் ஒருபோதும் அனுமதிக்க முடியாது.

மாகாணசபையின் அடித்தளமாக இருக்கும் 13ஆவது திருத்தச் சட்டத்தை நீக்குவதே இதற்கு ஒரே வழி என்ற வகையில் பேரினவாத தென்னிலங்கை சிங்கள அரசு பிரசாரத்தை முன்னெடுத்து வெற்றியும் கண்டு வருகிறார்கள்.

இதற்கு வலுசேர்க்கும் விதமாக எமது தமிழ் இனத்திலேயே தேசியவாதிகள் என்ற போர்வையோடு இயங்கும் அரச கைக்கூலிகள் 13 எதிர்ப்பு என்று ஒரு போராட்டத்தை அரசின் கனவுகளை நிறைவேற்றுவதற்கு சாதகமாக செயல்படுகிறார்கள். இவர்களை தமிழ் மக்கள் அடையாளம் கண்டு நிராகரிக்கவேண்டும்.

தமது அரசியல் கொள்கைக்கான எந்தப் பாதையையும் வகுக்க முடியாதவர்கள் இதுவரையும் எந்த நகர்வையும் மேற்கொள்ளாதவர்கள் தமிழர்கள் ஒருமித்து முன்னெடுக்கும் செயல்பாடுகளை விமர்சிப்பதையே அரசியலாக கொண்டுள்ளார்கள்.

ஒற்றையாட்சியை எதிர்க்கிறோம் என்று கூறிக்கொண்டு அதன் கீழுள்ள பிரதேச சபைகளில் பதவிகளை பெற்றுக் கொண்டவர்கள். ஒற்றை ஆட்சியை ஏற்று சத்தியப் பிரமாணம் செய்து பாராளுமன்ற பதவிகளை அலங்கரித்துக் கொண்டவர்கள். எதிர்க்கிறோம் என கூறும் 13 இல் உள்ள மாகாணசபைத் தேர்தலில் போட்டியிட தயாராகி வருபவர்கள் . இரட்டைவேடம் போடும் இவர்களை மக்கள் அடையாளம் கண்டு கொள்ள வேண்டும்.

இவர்களால் தமிழ் மக்களுக்கு எந்த விதமான தீர்வையோ விடிவையோ பெற்றுத்தர முடியாது. தமது அரசியல் கையாலாகாத நிலையை மக்கள் அடையாளம் கண்டுவிட்டார்கள் என்பதால் வெற்று கோசங்களின் மூலம் எம்மக்களை ஏமாற்ற முயலுகிறார்கள். போராட்டத்துக்காக ஒரு துளி வியர்வை கூட சிந்தாதவர்கள் உயிரிழந்த போராளிகளையும் மக்களையும் தமது ஈனச் செயல்களுக்கு பயன்படுத்துகிறார்கள். அந்த புனித ஆத்மாக்களின் தியாகங்களை தமது சுயலாப அரசியலுக்காக விலை பேசுகிறார்கள்.

தமிழர்களுக்கான அரசியல் தீர்வை வேண்டி போராட வேண்டிய தேசியவாதிகள் என்று கூறிக் கொள்பவர்கள் தமிழர்களுக்கு எதிராகவே ஒரு போராட்டத்தை தாயக பூமியில் நடத்துவதற்கு தமிழ் மக்கள் ஒருபோதும் அனுமதிக்கக் கூடாது.

ஏற்கனவே அரசின் முகவர்கள் பலர் சிறு குழுக்களாக நின்று தேசியத்துக்கு எதிரான கருத்துக்களை தெரிவித்து வருவதை நீங்கள் அறிவீர்கள். அதே பாதையில் தேசியவாதிகள் என்ற போர்வையை போர்த்திக்கொண்டு தமிழின எதிர்ப்பு என்னும் அரசின் நிகழ்ச்சி நிரலை சிரமேற்கொண்டு அரசின் கனவுகளை நிறைவேற்றும் இந்த கைக்கூலிகளை நிராகரித்து தமிழரின் ஒற்றுமையை பேரினவாத அரசுக்கும் சர்வ தேசத்துக்கு தெரிவிக்குமாறு தமிழ் மக்களை வேண்டிக் கொள்கிறோம்-என்றுள்ளது. (அ)

## தமிழக...

மீன்பிடி படகுகளை ஏலம் விடுவது குறித்தும், ஜனவரி 23ஆம் திகதி இலங்கை நாட்டினர் தமிழக மீன வர்கள் மீது தாக்குதல் நடத்தியது குறித்தும் கேள்வி எழுப்பியதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

குறித்த கடிதத்தில், "இலங்கை அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் உள்ள தமிழ்நாட்டைச் சேர்ந்த 105 மீன்பிடிப் படகுகளை மீன்பிடி மற்றும் நீரியல் வளத்துறை எதிர்வரும் 7ஆம் திகதி முதல் 11ஆம் திகதி வரை ஏலத்தில் விடுவதற்கு முயற்சி செய்வதாக வந்துள்ள செய்தி கவலையையும் வேதனையையும் அளிக்கிறது.

இந்திய - இலங்கை கூட்டு பணிக் குழுவானது மீன்பிடித்தல் தொடர்பான பேச்சுவார்த்தை மீண்டும் தொடங்க விருக்கும் சூழ்நிலையில், இந்த ஏலம் விடுவதற்கான அறிவிப்பு துரதிர்ஷ்டவசமானது. நீண்ட காலமாக நிலுவையில் உள்ள இப்பிரச்னைக்கு சுமுகமான தீர்வு காண முன்வந்துள்ள தமிழக மீனவர்கள் மத்தியில் இலங்கை அரசின் இந்த நடவடிக்கை அதிர்ச்சியையும் அவநம்பிக்கையையும் ஏற்படுத்தியுள்ளது.

இலங்கை அரசு முறையாக கலந்தாலோசனை மேற்கொள்ளாமல் ஏலத்தை நடத்த அவசரம் காட்டுவது, வாழ்வாதாரத்தை இழந்த தமிழக ஏழை மீனவர்களுக்கு உதவி செய்யும் நோக்கில் இந்திய தூதரகமும் தமிழக அரசும் மேற்கொண்டு வரும் முயற்சிகளை பாதிக்கும்.

தமிழக மீனவர்களின் படகுகளை எவ்வித சட்டபூர்வமான உரிமையும் இல்லாத இலங்கை அரசின் மீன்பிடி மற்றும் நீரியல் வளத்துறை ஏலம்விட உள்ளதாக வெளியிடப்பட்டுள்ள விளம்பரத்தை திரும்பப்பெறவும் இந்திய அரசின் சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளை கொண்டு இலங்கை அரசுக்கு இந்திய அரசின் மறுப்பையும் கண்டனத்தையும் பதிவு செய்யவேண்டும்.

இந்த சூழ்நிலையில், 2018ஆம் ஆண்டுக்கு முன் கைப்பற்றப்பட்ட மற்றும் பழுது பார்க்க இயலாதென கருதப்படும் 125 தமிழக படகுகளை ஒளிவு மறைவற்ற வெளிப்படைத்தன்மையுடன் அப்புறப்படுத்துவதற்கான முயற்சிகளை மத்திய அரசு தொடர வேண்டும்.

இலங்கை கடற்படையினரால் 2018 ஆம் ஆண்டுக்கு பின்னர் கைப்பற்றப்பட்ட 75 படகுகள் மற்றும் மீன்பிடி உபகரணங்களை முன்கூட்டியே விடுவிப்பதை உறுதி செய்ய வேண்டும். மத்திய அரசு இந்த விடயத்தில் உடனடியாக தலையிட வேண்டும்" என அவர் கூறியுள்ளார். (அ)

# காரைநகர் பிரதேச சபையின் உபதவிசாளராக விஜயராசா!

மானிப்பாய், ஜன. 27

காரைநகர் பிரதேச சபையின் உப தவிசாளராக இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் ஆண்டிஐயா விஜயராசா ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டார்.

உள்ளூராட்சி ஆணையாளர் பற்றிக் டிரஞ்சன் தலைமையில் நேற்று இடம்பெற்ற கூட்டத்திலேயே இவர் உப தவிசாளராக தெரிவு செய்யப்பட்டார்.

உபதவிசாளருக்கான தெரிவில், சுயேச்சைக் குழு உறுப்பினர்கள் மூவர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் இருவர், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உறுப்பினர் ஒருவர் அவருக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

இதேசமயம், ஈ. பி. டி. பி. கட்சியின் உறுப்பினர்கள் இருவர், ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்கள் இருவர் என நான்கு உறுப்பினர்கள் சபைக்கு சமுகமளித்திருக்கவில்லை. (ஐ- 5)

## மின்சார...

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு அனுப்பியுள்ள பதவி விலகல் கடிதத்தில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பல தடவைகள் மின்சார சபையின் தலைவ ராக பதவி வகித்த எம்.எம்.சி. பேர் டினாண்டோ, யுகதனவி மின் உற்பத்தி நிலையத்தின் அரசாங்கத்துக்கு சொந்தமான பங்குகளை அமெரிக்க நிறுவனத்துக்கு மாற்றுவதற்கான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டதையடுத்து பெரும் சர்ச்சைக்குள்ளானார்.

இதன் காரணமாக, இவரின் செயல்பாடு தொடர்பில் மின் பொறியாளர்கள் மற்றும் பிற ஊழியர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர்.

இந்நிலையிலேயே அவர் பதவி விலகியுள்ளார். (அ)

## வவுனியா...

இதன்போது, மாவட்ட செயலகத்துக்குள் நுழைய முயன்ற போராட்டக்காரர்களை பொலிஸார் தடுத்து நிறுத்த முயன்ற போது இரு தரப்பினரிடையேயும் தள்ளுமுள்ளு ஏற்பட்டு முறுகல்நிலைவரை சென்றது. இதனால், அந்தப் பகுதியில் பதற்றம் ஏற்பட்டது.

காலை 9.30 மணி முதல் சுமார் மூன்று மணி நேரத்துக்கும் அதிகமான நேரம் நீடித்த இந்தப் போராட்டத்தால் பிரதான வீதியூடான போக்குவரத்தும் தடைப்பட்டது. இதனால், போக்குவரத்துக்கு மாற்றுவீதியை பயன்படுத்தும் விதமான நடவடிக்கையும் பொலிஸார் முன்னெடுத்திருந்தனர்.

போராட்டக்காரர்களை அடக்கமுடியாது பொலிஸார் திணறிய நிலையில், போராட்டம் இடம்பெற்ற இடத்துக்கு வவுனியா தலைமையக பொலிஸ் பொறுப்பதிகாரி ஜே. ஏ. எஸ். ஜெயக்கொடி, மாவட்டத்தின் மேலதிக அரசாங்க அதிபர் தி. தினேஷ்குமார் ஆகியோர் சென்று அவர்களுடன் கலந்துரையாடினர். இதைத் தொடர்ந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களை பதிவு செய்வதற்கான அதிகாரிகளும் அவர்களுடன் பேசினர்.

இதன்போது, "இந்த அரசே எம் உறவுகளை காணாமல் ஆக்கியது. அவர்களிடம் இருந்து எமக்கான நீதி எவ்வாறு கிடைக்கும். இதுவரை அமைக்கப்பட்ட ஆணைக்குழுக்களுக்கும் விசாரணைகளுக்கும் என்ன நடந்தது என்ற கேள்விகளை எழுப்பினர்.

அத்துடன், "மரணச்சான்றிதழையும், இழப்பீட்டையும் ஒருபோதும் பெற்றுக் கொள்ளமாட்டோம். ஓ. எம். பி. அலுவலகம் வேண்டாம் என்கிறோம் நீங்கள் ஏன் அதனை எமக்கு திணிக்கின்றீர்கள். இனிமேல் இங்கு வரவேண்டாம்", என்று கூறிய காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் அங்கிருந்து வெளியேறினர்.

இதேநேரம் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் எழுப்பிய கேள்விகளுக்கு அதிகாரிகள் பதில் அளிக்க முடியாது திணறி மௌனித்திருந்தனர் என்று அங்கிருந்தவர்கள் கூறினர்.

போராட்டத்தில் ஈடுபட்ட தரப்பினர் "நீதி அமைச்சால் நீதி கிடைப்பதில்லை", "கால அவகாசம் வேண்டாம் நீதிதான் வேண்டும்", "செயல் திறனற்ற ஓ. எம். பி.யை நம்பி காலத்தை கடத்தாது", "இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்துங்கள்" என எழுதப்பட்ட பதாதைகளையும், காணாமல் ஆக்கப்பட்டோரின் புகைப்படங்களையும் தாங்கியிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## வடக்கில் நேற்று...

மருத்துவமனையில் ஒருவரும், கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவமனையில் ஒருவரும், முல்லைத்தீவு மாவட்ட பொது மருத்துவமனையில் ஒருவரும் வவுனியா பொது மருத்துவ மனையில் இருவருமாக 9 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

## கிளிநொச்சியில்...

நாளர்களும் அடையாளம் காணப்பட்டனர். ஆனால், இந்த எண்ணிக்கை பரிசோதனைக்கு உட்படுத்திக் கொண்டவர்களில் மட்டுமே. சமூகத்தில் இதைவிட அதிகளவான தொற்றாளர்கள் காணப்படலாம் என்றும் சுகாதாரப் பிரிவு எச்சரித்துள்ளது.

நாட்டில் ஒமைக்ரோன் தொற்று அதிவேகமாக பரவிவருவதால் பொதுமக்கள் மிகுந்த அவதானத்துடன் செயல்படுமாறும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## இலங்கை...

"இலங்கையில் பொருளாத நிலைமை மோசமடைந்து வருவதால், அடிப்படை தேவைகளுக்கு பற்றாக்குறை ஏற்படுகின்றது. இது பாதுகாப்பு நிலைமையை மேலும் மோசமடையச் செய்யும்", என்று கூறியுள்ளது.

கடந்த வாரமும் கனடா அரசாங்கம் இவ்வாறான ஒரு பயண எச்சரிக்கையை தனது நாட்டு மக்களுக்கு விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## சைக்கிளில்...

நடவடிக்கை எடுப்பதற்கு அமைச்சரவை பத்திரம் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

நகரங்களில் போக்குவரத்து நெரிசல் ஏற்படும்போது பயணிக்கும் வாகனத்திற்கு ஒரு கிலோ மீற்றருக்கு அரசு ரூ.103.56 செலவழிக்க வேண்டும் என்று ஒரு கணக்கெடுப்பு தெரிவிக்கிறது.

சைக்கிளை பயன்படுத்துவதன் மூலம் ஒரு கிலோமீற்றருக்கு 236.48 ரூபாயை மிச்சப்படுத்த முடியும் எனவும் அரசாங்கத்திற்கு 339.98 ரூபாய் இலாபம் கிடைக்கும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

## பிளாஸ்ரிக்...

கள் அண்மையில் இறந்தன என்று அம்பாறை மாவட்ட வன விலங்கு கால் நடை மருத்துவர் நிஹால் புஷ்ப குமார தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தில் கடந்த 8 வருடங்களில் குப்பைகளிலுள்ள பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் கழிவுகளை உண்ட 20 யானைகள் இறந்தன என்றும் அவர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

திறந்தவெளிக் குப்பைக் கிடங்கில் பிளாஸ்ரிக், பொலித்தீன் கழிவுகள் அதிகளவில் கொட்டப் படுவதும் - தேங்கிக் கிடப்பதுமே இதற்குக் காரணம் என்றும் கூறப்பட்டது.

இறந்த யானைகளை பரிசோதித்த போது, அவை பிளாஸ்ரிக், பொலித்தீன் கழிவுகளை அதிகளவில் விழுங்கியுள்ளன. யானைகள் சாப்பிட்டு ஜீரணிக்கும் சாதாரண உணவு எதுவும் அங்கு தெளிவாகத் தெரியவில்லை என்றும் மருத்துவர் இதன் போது தெரிவித்தார். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# என்னை அழிக்க நினைத்தே வடக்கு தலைவர்கள் சிறையில் அடைத்தனர்!

## பிள்ளையான் குற்றச்சாட்டு



மட்டக்களப்பு, ஜனவரி 27

**“கிழக்கு மாகாணத்தின் தனித்துவம்பற்றி பேசியவரை வடக்கு தலைவர்கள் அழிக்க நினைக்கின்றார்கள். நாம் காப்பாற்றவேண்டும் என்பதற்காக இளைஞர், யுவதிகள் அதிகூடிய வாக்குகளை அளித்து கௌரவத்துடன் என்னை சிறையிலிருந்து மீட்டெடுத்தனர்”, என்று மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான பிள்ளையான் என்று அறியப்பட்ட சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்தார்.**

கோறளைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட சுங்கான் கேணி கிராமத்திற்கான பிரதான வீதியை புனரமைப்பதற்கான பணிகளை ஆரம்பித்து வைத்து உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும், “வட, கிழக்கில் பாராளுமன்ற தேர்தலில் போட்டியிட்டவர்களில் அதிகூடிய விருப்பு வாக்கு எனக்குக் கிடைத்தது. அதற்கு காரணம் நான் இந்த மண்ணை நம்பி பணியாற்றியவன். கிழக்கு மாகாணத்தின் தனித் துவம் பற்றி பேசியவரை வடக்கு தலைவர்கள் அழிக்க நினைக்கின்றார்கள் காப்பாற்றவேண்டும் என்பதற்காக இளைஞர், யுவதிகள் அதிகூடிய வாக்குகளை அளித்து கௌரவத்துடன் சிறையிலிருந்து மீட்டெடுத்தனர்.

நான் சிறையிலிருந்து வெளிவரும் போது கோவிட் - 19 தொற்று உலகளாவிய ரீதியில் ஏற்பட்டுவிட்டது. நாங்கள் முன்வைத்த தேர்தல் விஞ்ஞாபனத்தை விரைவாக அமுலாக்குவதில் மிகப்பெரிய சங்கடங்களும் உள்ள சூழ்நிலையில்தான் உள்ளோம். இருந்த போதிலும் நாங்கள் பொதுஜன பெரமுன அரசாங்கத்துடன் ஓர் இணக்கப்பாட்டு அரசியலை மேற்கொண்டு வருகின் றோம். தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சி ஒரு தனித்துவமான கட்சி. எமது கட்சி பொதுஜன பெரமுனவுடன் கூட்டு வைத்துவைத்துள்ளது. அந்த கட்சியின் உறுப்பினர் இந்த நாட்டின் ஜனாதி பதியாகவுள்ளார். ஓர் இணக்கப் பாட்டுடன் நாங்கள் செயல்படுவதன் காரணமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் கோவிட் தொற்றின் காரணமான கடுமையான நெருக்கடிகளுக்கும் மத்தியில் பல அபிவிருத்தி திட்டங்களை நிறைவேற்றியுள்ளோம் - பலவற்றை செய்துவருகின்றோம்.

நான் கல்வைத்தேன் என்பதற்காக கட்டப்படாமலிருந்த பொதுநூலகத்தின் கட்டடப் பணிக்கு நான் 200 மில்லியன் ரூபாயை ஒதுக்கீடு செய்து பணி நடைபெற்று வருகின்றது. இந்த கொரோனா தொற்று அதிகரிக்காத நிலையிருந்தால் மே மாதம் அல்லது அதற்கு பின்னர் நூலகம் திறந்துவைக்கப்படும்.

இதேபோன்று 62 கிலோமீற்றர் பாதைகளை புனரமைப்புக்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. 100 கிலோ மீற்றர் முதல் கட்ட அனுமதி எனக்கு கிடைத்திருந்தது. இரு வாரத்தில் மேலும் 40கிலோமீற்றர் வீதி வரவுள்ளது. பல அபிவிருத்தி சார்ந்த நிதிகளை நாங்கள் கொண்டுவந்திருக்கின்றோம்.

இந்த நன்மைகள் ஊடாக கிராமங்களில் மாற்றங்கள் ஏற்படவேண்டும். கல்வியும் பொருளாதாரமும் இல்லை என்றால் மிகவும் பின்தங்கிய நிலைக்குச் சென்றுவிடும். அதனை கட்டியெழுப்புவ தற்கான தளம் இன்னும் எங்களுக்கு போதாதாகவேயுள்ளது.

நாங்கள் எமது பிரதேசத்தின் உற்பத்தி துறையை சர்வதேசத்தின் தரத்திற்கு கொண்டுசெல்வதற்கான கல்விதுறையை நாங்கள் தேர்ந்தெடுக்கவேண்டும் - என்றார். (ஐ)

விடுதலை புலிகள் மீளுருவாக்கம்

# 26 பேரின் கையெழுத்துகளை பெறுவதற்கு நீதிமன்று அனுமதி!

கொழும்பு, ஜன. 27

தமிழீழ விடுதலை புலிகள் அமைப்பை மீள உருவாக்க முயன்றனர் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள 26 சந்தேக நபர்களின் கையெழுத்துக்களை பரிசோதனை செய்து மன்றுக்கு அறிக்கையளிக்குமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கொழும்பு மேலதிக நீதிவான் சந்திம லியனகே, இதற்கான உத்தரவை அரச கையெழுத்து பரிசோதகருக்கு நேற்றுமுன்தினம் பிறப்பித்துள்ளார்.

இந்த சந்தேக நபர்கள், புலிகள் அமைப்பில் சேர்வதற்காக விண்ணப்பங்களை பூர்த்தி செய்துள்ளனர் என்றும், அவை தமது அதிகாரிகளால் மீட்கப்பட்ட பின்னர் கடந்த 2020 மார்ச் 26 ஆம் திகதி சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர் என்றும் பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவினர் நீதிமன்றுக்கு அறிவித்துள்ளனர்.

இதன்படி, இந்த சந்தேகநபர்கள் நிரப்பினர் என்று கூறப்படும் குறித்த விண்ணப்பத்தில் உள்ள கையெழுத்தையும் சந்தேக நபர்களின் கையெழுத்தையும் ஒப்பீடு செய்ய வேண்டியுள்ளதாகவும் அதற்கு அனுமதியளிக்குமாறும் கோரினர். இதன்படியே இந்த உத்தரவு நீதிமன்றால் வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு கைது செய்யப்பட்ட 26 இளைஞர்களும் யாழ்ப்பாணம் மாவட்டத்தின் பல்வேறு இடங்களை சேர்ந்தவர்களாவர். அத்துடன், இவர்களை சட்ட மா அதிபரின் ஆலோசனை கிடைக்கும் வரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (ஐ)

# மட்டக்களப்பு விமானப் படையின் தளத்துக்குள் நுழைந்தவர் கைது!

மட்டக்களப்பு, ஜன. 27

மட்டக்களப்பு விமானபடை தளத்திற்குள் அனுமதியின்றி விமானப்படையின் சோதனைச்சாவடி ஊடாக உள்நுழைந்த ஒருவர் நேற்று புதன்கிழமை காலை கைது செய்யப்பட்டார் என்று மட்டக்களப்பு தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று காலை 8 மணியளவில் வழமைபோல விமான நிலையத்துக்குள் வேலைக்கு செல்லும் பணியாளர்களுடன் பணியாளராக விமானப் படையின் சோதனைச்சாவடி ஊடாக ஒருவர் உள்நுழைந்துள்ளார்.

இவ்வாறு உள்நுழைந்தவர் அங்குள்ள விமானப் படையின் தளப்பகுதிக்கு சென்ற நிலையில் சந்தேகம் கொண்ட விமானப் படையினர் அவரிடம் பணி யாளர் அடையாள அட்டையை கேட் டுள்ளனர். அதற்கு அவர் தேசிய அடையாள அட்டையை காட்டியுள்ளார். இதையடுத்து அவரை விமானப் படையினர் கைது செய்தனர்.

இவ்வாறு கைதானவர் வாழைச் சேனை மீராவோடையைச் சேர்ந்த 41 வயது நபர் என்று அறிய வருகின்றது. அவர் வாழைச்சேனை பிரதேச செயலத்தில் கடமையாற்றிவருகிறார் என்றும் மனைவியை மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்று விட்டுவிட்டு விமான நிலையத்தை பார்ப்பதற்காகவே பணியாளர்களுடன் பணியாளராக உள்ளே நுழைந்தார் என்றும் விசாரணைகளில் தெரிவித்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அவரிடம் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)




# அடங்காமை திரைப்படம் நாளை வெளியாகின்றது!

யாழ்ப்பாணம், ஜன. 27

அடங்காமை எனும் முழு நீளத்திரைப்படம் வரும் நாளை வெள்ளிக்கிழமை முதல் இலங்கையின் பல மாவட்டங்களில் வெளியாகவுள்ளது.

இந்தத் திரைப்படம் தொடர்பான செய்தியாளர் சந்திப்பு தனியார் விடுதியில் நேற்று இடம்பெற்றது.

இதில் பங்கேற்ற ஏற்பாட்டாளர்கள் கூறுகையில், “இந்தத் திரைப்படத்தின் தயாரிப்பாளர்களான மைக்கேல் ஜோன்சன் மற்றும் பொன். புலேந்திரன் ஆகியோரும் கதாநாயகனாக நடித்திருக்கும் சரோன் என்பவரும் இலங்கையை சேர்ந்தவர்கள்.

“திரைப்பட இயக்குநர் கோபால் மற்ற தொழிநுட்ப கலைஞர்கள் அனைவரும் தென்னிந்தியாவை சேர்ந்தவர்களே. தென்னிந்திய உருவாக்கமாக இருந்தாலும் இலங்கை தமிழர்களின் பங்களிப்பு என்பது உலகின் அனைத்து பாகங்களிலும் உள்ள சினிமாக்களில் அதிகூடிய பங்களிப்பு எனலாம்.

“அந்தவகையில் ஒரு முக்கிய திருப்புமுனையாக இந்தத் திரைப்படம் மாறுவதற்கான சந்தர்ப்பம் உள்ளது. இத்திரைப்படமானது அண்மையில் தமிழ் நாட்டில் அனைத்து திரையரங்குகளிலும் வெளியாகி சிறப்பான வரவேற்பு கிடைத்தை அடுத்து இலங்கையில் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள திரையரங்குகளில் திரைப்படம் வெளியாகவிருக்கின்றது.

“சிறுவயது நண்பர்கள் மூவர் வளர்ந்த பின் அவரவர் வாழ்வும் நட்பின் பிணைப்பும் எவ்வாறு நகர்கின்றது என்பதே திரைப்படத்தின் கருப்பொருளாகும். திரைப்படத்தை அனைவரும் திரையரங்கில் கண்டு மகிழ அன்புடன் அழைக்கின்றோம்.”, என்றனர். (ஐ-3)

# பல்வேறு விபத்துக்களில் 12 பேர் உயிரிழந்தனர்!

கொழும்பு, ஜன.27

நாடளாவிய ரீதியில் கடந்த சில தினங்களாக இடம்பெற்ற விபத்துக் களில் 12 பேர் உயிரிழந்தனர் என்று, பொலிஸ் ஊடக பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித் துள்ள அவர்,

நேற்று முன்தினம் மட்டும் ஆறு விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன. இந்த விபத்துக்களில் ஆறு பேர் உயிரிழந்தனர். வாகன சாரதிகளின் கவனவீனம் காரணமாகவே இந்த ஆறு விபத்துக் களும் இடம்பெற்றுள்ளன.

அதிகாலை வேளையில் வாகனத்தை செலுத்துபவர்கள் மிகுந்த அவதானத் துடன் வாகனங்களை செலுத்த வேண்டும். பாதுகாப்பற்ற பயணம் காரணமாக சாரதிகளின் உயிர் மற்று மன்றி வாகனங்களில் பயணிப்பவர்கள், வீதிகளில் பயணிப்பவர்களும் உயிரிழக்கும் நிலைமை ஏற்படுகிறது.

இதேபோன்று சொத்துக்களுக்கும் சேதம் ஏற்படுகின்றது. எனவே மிகுந்த அவதானத்துடன் வாகனங்களை செலுத்துமாறு நாம் சாரதிகளிடம் கோரிக்கை விடுக்கின்றோம் என்று அவர் மேலும் தெரிவித்தார். (கே)




இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 27.01.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**

6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
7.05 மணி : உளவியல் கருத்து
வழங்குபவர் உளவள துனையாளர்
திரு.நா.நவராஜ்
7.15 மணி : கதைவழி அறமொழி-
ஜோன்சன் ராஜ்குமார் ஆசிரிய ஆலோசகர்
7.20 மணி : சித்த மருத்துவம்
வழங்குபவர் டாக்டர்
விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : பாரதீ - மறுஒளிபரப்பு

**பகல்**

12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை



1.00 மணி : நலம்தானா-மறுஒளிபரப்பு
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-பாண்டியநாடு,
பெண்குயின் திரைப்படங்களிலிருந்து
காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர்களுக்கான
நேரலை நிகழ்ச்சி



5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : வெள்ளித்திரை

**இரவு**

7.00 மணி : சமையல் சமையல்
7.30 மணி : வெள்ளிடை நுட்பம்-
தொழில்நுட்பம் பயன்பாடுபற்றிய
நிகழ்ச்சி
8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : கச்சேரி ஆரம்பம்



10.00 மணி : நேருக்கு நேர்-அரசியல் நிகழ்ச்சி

## DAN COMEDY HD

**காலை**

6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : திரைப்படம்

**பகல்**

1.00 மணி : நகைச்சுவை மன்னன்
வடிவேல் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : திரைப்படம்
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**

8.00 மணி : திரைப்படம்
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**

6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**

12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஒய்வெடு நிலவே

**இரவு**

8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**

5.15 மணி : க.பொ.த உயர்தரம் - விவசாயம்
6.00 மணி : க.பொ.த உயர்தரம் - வணிகம்
6.45 மணி : க.பொ.த உயர்தரம் - உயிரியல்
7.30 மணி : க.பொ.த உயர்தரம் - பொருளியல்
8.15 மணி : க.பொ.த உயர்தரம் - கணக்கீடு
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப்
பிரிவு) விஞ்ஞானம்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு)
பொருளியல்
11.00 மணி : க.பொ.த உயர்தரம்
(கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) இரசாயனவியல்

**பகல்**

12.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு)
மறு ஒளிபரப்பு
1.00 மணி : தரம் 5 மாதிரி வினாத்தாள்
2.00 மணி : தரம் 5 சுற்றாடல்
3.00 மணி : தரம் 5 கணிதம்
4.00 மணி : தரம் 6 - 9 ஆங்கிலம்
5.00 மணி : பொது சிங்களம்
6.00 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்

**இரவு**

7.00 மணி : க.பொ.த. சாதாரண தர
மாதிரி வினாத்தாள்

## ஓம் ரிவி

**காலை**

05.00 மணி : சிவாய மந்திரம்
06.00 மணி : சுப்ரபாதம்
06.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.20 மணி : ஈழத்து சித்தர்கள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழககோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**

12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
06.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**

07.00 மணி : செய்திகள்
07.30 மணி : அருளுரை
08.00 மணி : திருவிழா-01

## CHANNEL HOLY MARY

**காலை**

7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
8.00 மணி : ஜெபமாலை
9.00 மணி : அன்னை மரியா (மறுஒளிபரப்பு சனி)
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை
(மறு ஒளிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஞானவழி மறு ஒளிபரப்பு ஞாயிறு

**பகல்**

12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை
(மறு ஒளிபரப்பு)

## Pirai Television

**காலை**

6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய சிறுவர் பாடல்
8.00 மணி : சற் வித் குட்டீஸ்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : வேர் கொள்
11.00 மணி : மனிதம்
11.30 மணி : சுக வாழ்வு

**பகல்**

12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : அன்னிஸா
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
4..00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : சற் வித் குட்டீஸ்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**

7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : பாடல்
8.30 மணி : மனிதம் வித் றிஸ்வான்
9.00 மணி : Bayan
10.00 மணி : சீரிஸ்
10.30 மணி : கலந்துரையாடல்